

# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

வள்ளுவர் ஆண்டு 2052 கீழறை ஆண்டு மடங்கல் நல்லோரை ஆவணித் திங்கள் 6ம் நாள் (22-08-2021) நிறைமதி வெளியீடு +94 21 221 2739



## மதுரை ஆதீனம் முத்தி



292 ஆவது குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் அருணகிரிநாத சீர்வளர் ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் திருமேனிப் பாங்கில்லாமல் 13-08-2021 அன்று முத்தி அடந்தார்.

# இலங்கையில் சைவத்தமிழ் ஆதீனங்கள் பல உருவாகவேண்டும்

# சிவபூமியில் சிவத்தினை மீண்டும் நிலைநிறுத்த வேண்டும்



திருமூலரால் சிவபூமி என போற்றப்படும் இலங்கையில் சைவத்தமிழ் ஆதீனங்கள் மற்றும் மடங்கள் பல தோற்றுவிக்கப்படவேண்டும், மீள்உருவாக்கப்படவேண்டும் அத்துடன் அவை இயங்குவதற்கு சைவத்தமிழர்கள் மற்றும் சைவ அமைப்புகள் அகத்திலும், புலத்திலும் உதவிகள் ஊக்கங்கள் வழங்கவேண்டும்.

சைவநெறி தொன்மையானது. வாழ்வியல் மற்றும் ஆகமமுறைகளை உலகுக்கு அளித்தது. திருக்குறள் முதல் திருமந்திரம் உட்பட திருமுறைகள் வரை வாழ்வியலை அதாவது வாழ்வாங்கு வாழும் உத்திகளை உலகுக்கே தந்தது. அதில் யோகம், துறவு, வீடு என்று சகலவற்றையும் செய்து காட்டியது. ஆனால் நாங்கள் தற்போது எல்லாவற்றையும் தொலைத்துவிட்டு, எங்களிடம் எடுத்து எங்களுக்கு தரும் மேற்கு மற்றும் வடக்கு உலகினை வியப்புடன் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இலங்கையில் சைவ நெறியினை, மழுங்காமல் தொடர்ந்து எடுத்துச்செல்லவும், சைவத்தின் திருமுறைகளின் பெருமைகளை இளம் தலைமுறையினருக்கு எடுத்துச் சொல்லவும், தலைமுறை வழி குருபரம்பரையினை உருவாக்கி சைவநெறியினை ஒவ்வொரு சைவத் தமிழரிடமும் கட்டிக் காக்கவும் நிச்சயம் ஆதீனங்கள் மற்றும் மடங்களின் தேவை எமக்கு இருக்கிறது என்பதனை அகத்திலும், புலத்திலும் வாழுகின்ற சைவத்தமிழர்கள் உணரும் காலம் கனிய வேண்டும்.

புலம்பெயர் நாடுகளில் 150 இற்கு மேற்பட்ட சைவத்தமிழ் கோயிகள் இருக்கின்றன. இது மகிழ்ச்சி தருகின்ற விடயமே ஆனாலும் அவர்கள் அத்துடன் நின்றுவிடாது தமிழரின் அடையாளத்தினை நிலைநிறுத்த சைவம் எனும் நெறிதான் ஒரேவழி என்பதை நன்குணர்ந்து புலத்திலும் அகத்திலும் சைவநெறி உய்யும் வண்ணம் செயற்பாடுகள், உதவிகளை நீண்டதூரச் சிந்தனையுடன் செய்யவேண்டும். மதமாற்றம் அடையாளத்தின் ஆக்கிரமிப்பு என்பதைச் சிந்தித்து, சைவத்திற்கு தலைமை ஆதீனங்கள் மற்றும் மடங்கள் தேவை என்பதை கருத்தில் கொண்டு, அவர்களுக்கான உதவிகளை ஊக்குவிப்புகளை செய்ய முன்வரவேண்டும்.

## 1500 வருட பழமையான மதுரை ஆதீனத்தின், 293வது சந்நிதானமாக சுந்தரமூர்த்தி சுவாமிகள்



மதுரையின் 292வது ஆதீனம் குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் அருணகிரிநாத சீர்வளர் ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகளின் மறைவு சைவத்தமிழ் உலகிற்கு ஒரு பேரிழப்பு. 2019 இல் சீர்வளர்சீர் அருணகிரிநாத சீர்வளர் ஞானசம்பந்த தேசிக பராமாச்சாரிய சுவாமிகளால் மதுரை ஆதின இளவரசாக நியமிக்கப்பட்ட சீர்வளர்சீர் அரிஹர சீர்வளர் ஞானசம்பந்த பராமாச்சாரிய சுவாமிகள் இன்னும் சிலநாட்களில் குருமரபில் மதுரை ஆதீன இருக்கையை அலங்கரிப்பார்.

## திருமுறையே சைவநெறிக் கருவூலம் ஆதாலால் ஓதுவார்களை வாழ்த்தி வணங்கிய அரன்பணி





திருமுறையே சைவநெறிக் கருவூலம் மற்றும் தமிழ்வேதம். அதனைத் தலைமுறை தலைமுறையாக ஊடுகடத்தும் ஓதுவார்கள் வணக்கத்திற்கு உரியவர்கள். காலம் மாறினாலும் அவர்களுக்குரிய சீர் சிறப்புகளை செய்து, அனைத்துக் கோயில்களிலும் ஒதுவர்களை நியமித்து தமிழ்வேதம் ஒலிக்க அனைவரும் முன்வரவேண்டும்.

கடந்த ஆடி 21 (ஆகஸ்ட் 6) கோபிச்செட்டிபாளையம் முத்துமகாலில் அரன்பணி அறக்கட்டளையின் ஏற்பாட்டில், உலகமக்கள் பெருந்தொற்றில் இருந்து நீங்கி உலகம் உய்யவும் மற்றும் சிவாலயங்களில் திருப்பணிகள் விரைந்து நடக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த திருமுறை விண்ணப்பம் நிகழ்வில் ஓதுவாமூர்த்திகள் கௌரவிக்கப்பட்டனர். தலைமை ஓதுவார் திருத்தணி.ந.சாமிநாதன் ஐயாவிற்கு ஓதுவாமூர்திகள் சார்பாக பாதபூசை செய்யப்பட்டு அவரை வணங்கி வழிபாடுகள் செய்யப்பட்டன. (பக் 8)

## அர்ச்சனை பாட்டேயாகும் ஆதலால் சொற்றமிழில் பாடிய சுந்தரர்









# புலம்பெயர் சூழலிலே சைவசமயம் எதிர்கொள்கின்ற சவால்களும் வாய்ப்புக்களும்

பாகம் 1





நியூசிலாந்து சிற்சபேசன்

**"தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவாபோற்றி"** என்னும் மாணிக்கவாசகரின் வரிகள் சைவசமயம் குறித்த பார்வைக்கு அற்புதமானதொரு ஆரம்பப் புள்ளியாகும். தென்னாட்டிலே சிவன் என்று பெயரிட்டு அவனை நாங்கள் வணங்குகின்றோம். பிறநாடுகளிலே அவனை வெவ்வேறு பெயரிட்டு வணங்குகின்றார்கள் என்பதாகவே மாணிக்கவாசகரின் வரிகளை வியாக்கியானம் செய்யலாம். அதேகருத்தையே, **"ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க"** என்னும் சிவபுராணவரிகளும் பிரதிபலிக்கின்றன. ஒருவனாக இருக்கின்றவனே சிவன். அவனே வெவ்வேறாகவும் பார்க்கப்படுகின்றான். இவ்வாறாக அறிந்தோ அல்லது அறியாமலோ, தெரிந்தோ அல்லது தெரியாமலோ பல்லோராலும் வணங்கப்படுகின்றவனே சிவனாகும். சிவனை முழுமுதல் கடவுளாகக் கொண்ட பரந்துவிரிந்த வழிபாட்டு முறையே சைவசமயமாகும்.

இத்தகைய பாரம்பரியமான வழிபாட்டுமுறை, புலம் பெயர்சூழலிலே எதிர்கொள்கின்ற சவால்களையும் வாய்ப்புக் களையும் வெளிக்கொணர்வதே இக்கட்டுரைத்தொடரின் நோக்கமாகும். அதேவேளையிலே, பூர்வீகச்சூழலிலே சைவசமயம் எதிர்கொள்கின்ற சவால்களையும் கவனிக்க வேண்டியிருக்கின்றது. ஏனெனில், இவ்விரண்டு சூழலுமே ஒன்றுடனொன்று தொடர்புடையவையாகும். இத்தகைய சவால்கள் நிறைந்த காலகட்டத்தை எதிர்கொள்வதற்கு வெளிப்படையான உரையாடல்கள் அவசியமாகின்றன. அதற்கான களத்தை உருவாக்கவேண்டியது வரலாற்றுக் கடமையாகின்றது.

அடுத்ததாக, அத்தகைய உரையாடல்களை எங்கே ஆரம்பிப்பது என்ற கேள்வி எழுகின்றது. வரலாறும், வரலாற்றுப் படிப்பினைகளும் முக்கியமானவையாகும். அந்தவகையிலே, கடந்தகாலங்களைத் திரும்பிப் பார்ப்பதே பொருத்தமான ஆரம்பமாகும். அதன்பின்னர், நிகழ்காலத்துச் சவால்களை வெளிப்படைத்தன்மையுடன் அணுகலாம். ஈற்றில், எதிர்காலம் குறித்த சிந்தனைகளுக்கு களம் அமைக்கவேண்டும். அதுவே இக்கட்டுரைத்தொடர் பயணிக்கவுள்ள தோராயமான வழித்தடமாகும்.

சமயம் என்ற குறுகிய வரையறைக்குள் சைவசமயம் திக்கித்திணறியே பொருந்துகின்றது. காரணம். சைவசமயம் ஒரு வழிபாட்டுமுறை மட்டுமல்ல. அஃது ஒரு வாழ்க்கை முறையாகும். **"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார், அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார், அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின், அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"** எனத் திருமூலர் அழகாகத் திருமந்திரத்திலே சொல்லியுள்ளார். அன்பும் சிவனும் வேறல்ல. அன்புதான் சிவனை அறியும் வழியாகும். அதனை வெளிப்படுத்துகின்ற நெறிமுறையே சைவசமயமாகும். அஃது, மனிதரை - மனிதராக வாழ வழிசொல்கின்றது. எதனையும் திணிப்பதில்லை. யாருக்கும் கட்டளையிடுவதில்லை. ஆதலினாலேயே, சைவசமயம் என்பது ஒரு வாழ்க்கைமுறை எனப்படுகின்றது.

இன்னுமொருவகையில் சொல்வதனால் சைவசமயத்துக்கு ஆரம்பம் இல்லை. யார் ஆரம்பித்தது? எப்படி ஆரம்பிக் கப்பட்டது? போன்ற தீர்க்கமான ஆரம்பப்புள்ளி எதனையும் கொண்டதல்ல. அதற்கு எழுதப்பட்ட வரலாறு கிடை யாது. அதனுடைய நெறியை ஏற்றுக்கொள்ளுமாறு யாரையும் வற்புறுத்துவதில்லை. எதனைச் செய்யவேண்டும். எதனைச் செய்யக்கூடாது என்ற வகையி லான விதிமுறைகள் கிடையாது. அதேவேளையில், மனிதரை மேன்மைப்படுத்துவதற்கான வழிமுறைகளையே சைவசமயம் அடையாளப்படுத்துகின்றது. அடையாளப்படுத்துவ தோடு நிறுத்திக் கொள்கின்றது. மேன்மையான வழிமுறைகளைத் தேர்ந்தெடுப்பதா அல்லது நிராகரிப்பதா என்பதை ஒவ்வொருவருடைய சுயமுடிவுக்கே சைவசமயம் விட்டுவிடுகின்றது. அந்தவகையிலே, சனநாயகக் கட்டமைப்பைக் கொண்ட ஒருவாழ்க்கைநெறி என்றும் சைவசமயத்தைச் சொல்லலாம்.

இத்தகைய வாழ்க்கைநெறியான சைவசமயமும், அதன்வழி நின்றொழுகியவர்களும் கடந்தகாலங்களில் எதிர்கொண்ட சவால்களை அறிந்துகொள்வது அவசிய மாகின்றது. அதுவே, நிகழ்காலச் சவால்களை எதிர்கொள்வ தற்கான நெஞ்சுரத்தையும், எதிர்காலம்குறித்த சிந்தனைகளிலே உயிர்ப்புத் தன்மையையும் ஏற்படுத்தக்கூடியனவாகும்.

கடந்தகாலம் என்பதைச் சைவசமய மறுமலர்ச்சிக்கு முந்தைய காலகட்டமாகக் கொள்ளலாம். அந்நியப் படையெடுப்புக்களினால் ஏற்பட்ட பிறசமயப்பரவலே, அன்றையகாலத்தில் முக்கிய சவாலாகக் காணப்பட்டது. சைவசமயத்தவரின் வழிபாட்டுத்தலங்கள் சிதைக்கப்பட்டன. வாழ்வுமுறைகள் கேள்விக்குட்படுத்தப்பட்டன. கட்டாய மதமாற்றங்கள் முன்னெடுக்கப்பட்டன.

தில்லியை ஆண்ட அலாவுதீன் கில்சியின் தளபதி மாலிக் கபூர் தென்னிந்தியப் படையெடுப்பில் காஞ்சிபுரத்திலுள்ள கோயில்கள், தில்லைநடராசர் கோயில், திருவண்ணாமலை, ஸ்ரீரங்கம் மற்றும் மதுரை மீனாட்சியம்மன் கோயில்களைத் தாக்கிச்சேதம் விளைவித்ததோடு, பெருமளவிலான கோயில் சொத்துக்களையும் கொள்ளையிட்டான்.

களப்பிரர்கள், பல்லவர்கள் எனத் தொடர்ச்சியாக ஏற்பட்ட அந்நிய ஆக்கிரமிப்புக்களினால் சைவசமயம் சவாலுக்குட் பட்டது. பாண்டிய நாடும், சோழநாடும் களப்பிரர்களின் ஆளுகைக்கு உட்பட்டது. தொண்டை நாடும், நடுநாடும் பல்லவர்களுடையதாகியது. சமணசமயமும், பௌத்த சமயமும் எழுச்சியடைந்தன. களப்பிரர் பாளி மொழியை ஆதரித்தனர். பல்லவர் பிராகிருத மொழியை ஆதரித்தனர்.

சைவசமயத்தின் வாழ்வுமுறையை பிறசமயங்கள் கேள்விக்குட்படுத்தின. வாழ்க்கை நிலையாமை என்பதனால், உலக இன்பங்களைத் துறந்த, துறவுவாழ்வே சிறந்தநெறியென சமணமும் பௌத்தமும் போதித்தன. அதனால் சைவசமயத்தவர் பிறசமயங்களை நாடினர். அதிகளவிலான மக்கள் சமணராகவும் பௌத்தராகவும் மாறினார். சமண பௌத்த மதங்களையே மன்னர்களும் ஆதரித்தனர்.

சமணசமயமும், பௌத்தசமயமும் செழித்திருந்த காலத்தில் பிறசமயங்களை நிராகரித்து சைவசமயத்தின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டதில் நாயன்மார்களின் பங்கு கணிசமானதாகும். ஏழாம் நூற்றாண்டில் ஆரம்பமாகிய பத்தி இயக்கம் வழியாக சைவசமய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்களிலே திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் குறிப்பிடத்தக்கவர்களாகும்.

பாண்டியமன்னன் சமண சமயத்தை தழுவினான். அதனால் மக்களும், அரசவையினரும் சமணசமயத்திற்கு மாறினார்கள். மங்கையர்கரசியார், அமைச்சர் குலச்சிறையார் போன்ற ஒருசிலர் மட்டுமே சைவசமயநெறியிலே நின்றொழுகினர்.

சைவசமயத்தின் மீள் எழுச்சிக்காக மங்கையர்கரசியார் தவம் செய்தார். பரசமயம் நிராகரித்து நீறாக்கும், புனைமணிப்பூண் காதலனைப் பெறவேண்டி சீர்காழியில் சிவபாதவிருதயரும், பகவதி அம்மையாரும் தவம்செய்தனர். இரண்டுபேரின் தவத்தின் பயனாக சீர்காழியில் அவதரித்த திருஞானசம்பந்தர், மங்கையர்க்கரசியாரின் தவத்தின் பலனாக மதுரைக்கு வந்தார். அங்கேயே அற்புதங்களைச் செய்தார். அதனூடாக, பாண்டியநாட்டில் சைவசமயத்தின் எழுச்சிக்கு வழிகோலினார்.

பாண்டியமன்னனுக்கு ஏற்பட்ட வெப்புநோயை சமணர்களினால் குணமாக்கமுடியவில்லை. திருஞானசம்பந்தர் "திருநீற்றுப் பதிகம்" பாடி வெப்புநோயைக் குணமாக்கினார். அதனால், பாண்டியமன்னன் சைவசமயத்துக்கு மாறினான். சமணர்கள் சினமடைந்தனர். அனல்வாதத்திலும், புனல்வாதத்திலும் சமணர்களை வென்றார். அதனூடாக, பாண்டிய நாட்டில் சைவசமயத்தின் மறுமலர்ச்சியை திருஞானசம்பந்தர் ஏற்படுத்தினார்.

திருநாவுக்கரசரின் இயற்பெயர் மருணீக்கியார் என்பதாகும். சமணசமயத்தினால் ஈர்க்கப்பட்டார். தருமசேனர் எனப்பெயர் மாற்றம் செய்துகொண்டார். அவரின் தமக்கையார் திலகவதியார் மதம் மாறவில்லை. சைவசமயத்திலேயே இருந்தார். அதனால் தன்னுடைய தம்பியார் சமணசமயத்தில் சேர்ந்ததை எண்ணி வருந்தினார். இறைவனிடம் முறையிட்டார். ஒருசந்தர்ப்பத்தில், தருமசேனருக்கு கடுமையான சூலைநோய் ஏற்பட்டது. சமணமடத்தில் அவருக்கு கிடைத்த சிகிச்சைகள் பலனளிக்கவில்லை. அதனால், தமக்கையார் திலகவதியாரின் வேண்டுகோளின்படி **"கூற்றாயினவாறு விலக்ககலீர்"** எனத் தொடங்கும் பாடலைப் பாடினார். அவருடைய சூலைநோய்




பல்லவர் கட்டிடக்கலை

அகன்றது. அதன்பின்னர் சைவசமயத்துக்குத் திரும்பினார். திருநாவுக்கரசரை சமணமன்னனான மகேந்திரபல்லவன் இடையறாது துன்புறுத்தினான். திருநாவுக்கரசரை கல்லிலே கட்டிக் கடலிலே போட்டபோது **"கற்றுணைப் பூட்டியோர் கடலினுள் பாய்ச்சினும் நற்றுணை ஆவது நமச்சிவாயவே"** என்று பாடியபோது கல் தோணியாக மிதந்தது.

சமணசமயம் துறவை அதிகம் வலியுறுத்தியது. பௌத்தசமயமும் துறவை முன்னிறுத்தியது. அந்தவகையிலே சமணம், பௌத்தம் போன்ற சமயங்களினாலே மக்கள் ஈர்க்கப்பட்டனர் ஆதலினால், சைவசமய எழுச்சிக்கு வித்திட்ட சமயகுரவர், துறவின் மகிமைக்கு பங்கம் விளைவிக்கவில்லை. அதேவேளையில், துறவியர்கெல்லாம் துறவி சிவன் என்பதைச் சுட்டிக்காட்டினர். அதே சிவன், ஒருபாகத்தில் பெண்ணுரு வானவன் என்றும் போற்றிப்பாடினார்கள். மனிதவாழ்வின் இயல்புகளுக்குச் சமணமும் பௌத்தமும் போதிக்கின்ற துறவுமுறை பொருந்தாது என்பதை, காலபோக்கில் மக்கள் உணரத்தொடங்கினார்கள்.

சமணத்தில் துறவுநெறி இயல்பானது. அதனைப் பலவந்தமாகத் திணிக்கும் மரபும் அங்கே இயல்பானது. ஆனால், சைவசமயத்தில் எதனையும் திணிக்கும் மரபு கிடையாது. சைவசமயத்திலே கட்டுப்பாடுகளற்ற வழிபாட்டு முறைகளுக்குப் பழகியிருந்த மக்கள், சமணசமயத்தில் காணப்பட்ட கட்டுப்பாடுகளால் திணறினர். அதுவும்கூட, அவர்களைத் தாய்மதம் நோக்கித் திருப்பியது எனலாம்.

திருநாவுக்கரசரை சமணத்துக்கு மாற்றமுனைந்த மகேந்திரபல்லவன் ஈற்றில் சைவசமயத்தைத் தழுவினான். மகேந்திரபல்லவனின் வருகை, சைவப்பாரம்பரியத்தின் கட்டிடக்கலையில் திருப்புமுனையாகியது. சைவத்தமிழ் மரபிலே மண், மரம், செங்கல், சுண்ணாம்பு போன்ற மூலப்பொருட்களைப் பயன்படுத்தியே கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டன. அதனாலேயே சங்ககாலத்திலும், சங்கமருவியகாலத்தைய கட்டுமானங்கள் காலத்தைக் கடந்து நிற்கமுடியவில்லை என்று கருதப்படுகின்றது. கல்லைக்குடைந்து தவம் செய்வதற்காக குடைக்கோவில் அமைப்பது சமண மரபாகும். சமணரான மகேந்திரபல்லவன் சைவசமயத்தை தழுவியபின்னர், சைவமரபிலே குடைக்கோவில் அமைப்பதில் முன்னோடியானான். தனிப்பாறைகளில் சைவக்கோயில்களைச் செதுக்குவித்தான். அதன்பின்னரேயே, கற்களைப் படிமானம் செய்து கட்டிடமாக கட்டுகின்ற மரபு ஆரம்பமாகியது.



பாண்டியர் கட்டிடக்கலை

## அடியார் பெருமையின் ஆவண ஊற்று பெரியபுராணம்

# மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திட வந்த ஆலால சுந்தரர்

உலகெலாம் வாழும் உயிர்களின் ஒப்பற்றத் தலைவனாக விளங்குபவன் சிவபெருமான். அவனை போற்றிய பாடல்கள் ஏராளம். பல அடியார்கள், சித்தர்கள் அவனை குறிப்பிட்டு புகழ்ந்திருக்கின்றனர். நாமோ இறைவனை போற்றிப் பாட ஆசைப்படுகிறோம். இறைவனோ அடியார்களைப் பற்றி பாட வேண்டும், அவர்களை இந்த உலகம் அறிய வேண்டும் என நினைத்திருக்கிறான். அதற்காக அற்புதமான திருவிளையாடலை யும் செய்திருக்கிறான்.



சிவத்திரு.
பா.சிவமாதவன்
புதுக்கோட்டை


காமனை எரித்த கண்ணுதலோன் வீற்றிருக்கக் கூடிய இடம் கயிலையம்பதி. இறைவன் அடியார் பெருமைகளைப் பாடுவதற்காக ஒருவரைத் தேர்ந்தெடுக்கின்றான். அவர்தான் பெருமானின் அனுக்கத் தொண்டரான ஆலால சுந்தரர். ஆலகால விடத்தைக் கண்டு அனைவரும் பயந்து ஓடியபோது, இவரே அதனைத் திரட்டி பெருமானிடம் கொடுத்தார். அப்பேற்பட்ட தவமுடையவர், எனவேதான் ஆலால சுந்தரர் எனப் பெயர் பெற்றார். இவரைத்தான் பெருமான் அடியார் பெருமைகளைப் பாட பொன்னுலகத்திலிருந்து மண்ணுலகத்திற்கு அனுப்பினார். அதற்காக பெருமான் செய்த செயல் சிறப்பானது.



சுந்தரர் பெருமானுக்கு மலர் கொய்திட நந்தவனத்திற்குச் செல்கிறார். அங்கு இறைவியின் சேடியர்களான அந்த மில் சீர் அணிந்திதையாரும், கந்தமாலைக் கமலினியாரும் ஈசனருளால் மலர்க் கொய்திட வருகின்றனர். அவ்வளவு காலமாக நடக்காத அதிசயம் அன்று நடந்தது. ஆலால சுந்தரர் அவ்விரு பெண்களைப் பார்த்து மனத்தை செலுத்து கிறார். அவர்களும் அதற்கு எதிர்வினையாற்றுகின்றனர். இது ஏன் நடந்தது என்பதை குன்றத்தூர் கோமகனார் மிகச் சிறப்பாக மொழிகிறார். அப்பாடல்.........

**"மாத வஞ்செய்த தென்திசை வாழ்ந்திட
தீதி லாத்திருத் தொண்டத் தொகைதர
போதுவார் அவர் மேல்மனம் போக்கிடக்
காதல் மாதரும் காட்சியில் கண்ணினார்"**

முதலில் இந்நிகழ்வு நடந்ததன் நோக்கம், மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திட எனக் குறிப்பிடுகிறார். அப்படியென்ன



தென்திசை மாதவம் செய்துள்ளது என்பதைப் பற்றி சுருக்கமாகப் பார்ப்போம். எல்லாப் புண்ணியங்களுக்கும் மேம்பட்ட சிவபுண்ணியம் செய்ய ஏதுவாயுள்ளது. இதனாலேதான் இது புண்ணிய பூமி எனப் பெறுவர். மாணிக்கவாசகர் இதனைக் குறிப்பிடுகையில்....

**"புவனியிற் போய்ப் பிறவாமை யினால்நாம்
போக்கு கின்றோம் அவமேஇந்தப் பூமி
சிவன் உய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமுதே பள்ளி எழுந்தருளாயே."**

மிக அற்புதமான பாடல் திருமாலும், நான்முகனும் நொந்துக் கொள்கிறார்களாம். பூமியில் போய் பிறந்து சிவனருளைப் பெறாமல், இங்கு வீணாக நாட்களை போக்குகின்றோமே என ஏங்குவதாக இப்பாடல் இருக்கிறது.

இங்கு ஒரு சிந்தனை, இயல்பாகவே நமக்கு ஒரு எண்ணம் இருக்கும். சொர்க்கத்திற்கு போக வேண்டும், வானுல தேவ வாழ்வைப் பெற வேண்டும் என்று. ஆனால் அங்கு இருப்பவர்களோ நாம் வாழும் இந்தப் பூமியில் வந்து பிறக்க ஆசைப்படுகிறார்கள். மேல், கீழ், நடு என்ற மூன்றுவகை அண்டங்களிலும் நடுவாகிய பூவுலகம் சிறந்தது.

மேல் உலகம், ஆகிய தேவருலகம் புண்ணிய உலகம் என்பர். புண்ணி யங்களுக்கேற்ப இன்பானுபவத் திற்கே உரியது. கீழ் உலகமாகிய நரக உலகம் பாவத்திற்கேற்பத் சிவபானுபவத்திற்கு உரியது. பூமி இரண்டுக்கும் உரியதாகும். அது வேயுமன்றிச் சிவபூசை, சிவபுண்ணி யங்களுக்கேற்றதாய் வீட்டுக்கும் வழிதரும். இந்தப் பூவுலகத்திலும் வேத சிவாகமங்களும் பிறந்து வழங்குதலாலும், புண்ணிய நதிகளும் புண்ணிய சிவத்தலங்களும் உள்ளதாலும் பாரதகண்டம் சிறந்தது. இப்பரத கண்டத்திலே, வடக்குப் பிரதேசத்தில் புண்ணிய நதிகள் இருந்தாலும், எல்லாத் தேவர் இருடிகள், முனிவர் முதலியோர்களும் வந்து பூசித்துப் பேறு பெற்ற தென்திசை சிறந்ததாகும். இன்னும் சிறப்பாகத் திருமூலர்,

**"ஈறான கன்னி குமரியே காவிரி
வோற நவதீர்த்த மிக்குள்ள வெற்பேமுள்
பேறான வேதா கமமே பிறத்தலால்
மாறாத தென்திசை வையகஞ் சுத்தமே"**
**(திருமந்திரம், திருக்கூத்து தரிசனம் - 34)**

ஆகவே அப்பேற்பட்ட தவமுடைய பெருமான் நேரடியாக வந்து திருவிளையாடல் செய்தும், அயிராவணம் ஏறி அமருலகு ஆளாமல் ஆரூரையே ஆட்சி பீடமாக கொண்டான் என்றால் இந்தத் தென்திசையின் தவத்தை என்னவென்று கூறுவது. அந்தத் தவத்திற்கான பயன் தீதிலாத் திருத்தொகைதான் என்பது இன்னும் சிறப்பு.

உயிர்களுக்கு உள்ள ஆணவமாதி தீமைகளையெல்லாம் இல்லையாகச் செய்யும் திருத்தொண்டத் தொகை என்னும் திருப்பதிகம். இத்திருப்பதிகம் ஒன்றே தன்னைச் சாதித்துப் பயில்வார்க்கு எல்லாத் தீமையும் போக்கி, எல்லா நன்மையும் அருளவல்லது. இதனை சிவஞானபோத பன்னிரண்டாவது சூத்திரம் சிறப்பாகக் கூறும்.

**"செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழிஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரன் எனத் தொழுமே" (சிவஞானபோதம்)**

சிவஞான நீரால் மலத்தை கழுவித் தூய்மை செய்து, சிவனடியார்களோடு, அன்போடு இருந்து, சிவவேடத்தையும், சிவ ஆலயத்தையும் சிவன் என்றே வணங்குவதாகும். இதனைத் தான் திருத்தொண்டத் தொகை செய்யும் என்பது திண்ணம்.

அப்படிப்பட்ட உயிர்ஞான நூலை மலர வைக்கும்



பேற்றை பெற்றதே நமது தென்திசையாகும். திருநாவுக்கரசப் பெருமான் கயிலைக்கு சென்ற போதும், அதனை தென்னாட்டு திருவையாற்றிலேதான் காட்டினார். காரைக்கால் அம்மையார் சென்றபோதும் குலவு தென்திசை பதியிலுள்ள திருஆலங்காட்டில்தான் நடவரசராகப் பெருமான் ஆடினார்.

காழிப்பிள்ளையார் திருஅவதார நோக்கத்தை சேக்கிழார் பட்டியலிடும் போதும் "திரைசயணைத்தின் பெருமையையெல்லாம் தென்திசையே வென்றேற" எனக் குறிப்பிடுகிறார். எனவே மாபெரும் தவமுடைய தென்திசையில் பிறவி கிடைத்தும், அதைப் பயன்படுத்தாது, அவமாக இல்லாமல், சிவமாக இருப்பதற்கு உண்டான வழியைத் தேட வேண்டும். உயிருக்கு உறுதியை உறுதிபட செய்யும் தென்னாடு சிவனை போற்றி உய்வு பெறுவோம்.

**திருச்சிற்றம்பலம்**

## ஆவணிக் குருபூசைகள்

- செருத்துணையார் - காற்குளம் (பூசம்)
- புகழ்த்துணையார் - கட்செவி (ஆயில்யம்)
- அதிபத்தர் - கொடுநுகம் (மகம்)
- இளையான்குடிமாறர் - கொடுநுகம் (மகம்)
- குலச்சிறையார் - பனை (அனுசம்)
- குங்குலியக்கலயர் - குருகு (மூலம்)

# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம், கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

சிவத்திரு. சிவ செந்தமிழாதன்,
தலைவர் – சைவ மாணவர் சபை,
(பதிவு-HA/4/JA/343)
0715588737, aathan@thennadu.org



## ஆணை பிறந்தது!

பரந்து விரிந்து செந்தமிழின் காப்பரணாய் நிற்கும் தமிழகம். அதன் வரலாற்றில் ஏராளம் அரசியல் மாற்றங்களைத் தாங்கிப் பயணித்திருக்கிறது. தடைகளும் தடங்கல்களும் வந்த போதெல்லாம், தமிழைத் தன் கருவில் வைத்துக் காத்திருக்கின்றது. வடநாட்டவரும், பிறநாட்டவரும் ஆண்ட போதும் தன் மொழிக்குப் பாதிப்பு இல்லாமல் பார்த்துக் கொண்ட அந்த மண், அதற்காகச் சில இழப்புக்களையும் தாங்கியிருக்கின்றது. உயிர்ப்பு நிலையிலேனும் தமிழை வைத்திருக்கும் பொருட்டு, சிலவிட்டுக் கொடுப்புக்களை சகித்தபடியே தாரைவார்த்தது! அல்லது திணிப்புக்களை வேறுவழியின்றித் தன் தலையில் சுமந்தது! அந்தத் திணிப்புக்களில் முக்கியமானது, கருவறைக்குள் வடமொழியைத் திணித்ததும், தமிழின் வழிபாட்டுத் தகுதியைத் தடுத்ததுமேயாகும்! வடமொழியே "தேவபாஷை" என்றும், அதில் வணங்கினாலே இறைவனுக்கு விளங்கும் என்றும், கதைசொல்ல, அருள் மொழியாகிய தமிழை கருவறைகளில் இருந்து தள்ளிவைக்க எந்த அதிகாரம் துணை நின்றதோ அந்த அதிகாரமே, இன்று தமிழை அர்ச்சுனை மொழியாக அறிவித்திருக்கின்றது. கடந்த ஆகஸ்ட் மாதம் நான்காம் திகதி, தமிழகத்தின் இந்து சமய அறநிலைத் துறை அமைச்சர் சேகர்பாபு அவர்கள் உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிட்டார்!

முகமதியர்களின் அதிகாரம், கி.பி 1363 இல் அதாவது ஏறத்தாழ முப்பத்து மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர், மதுரைச் சிற்றரசர்கள் நாயக்க மன்னனான, விஜயநகர வேந்தன் குமாரதம்பண்ணனின் உதவியை நாடியதால் தமிழகத்தில் இருந்து இல்லாமல் போனது! ஆனால் விஜயநகரப் பிரதிநிதிகளின் அதிகாரம் தலைதூக்கியது! தெலுங்கர்களான விஜநயநரகப் பேரரசின் பிரதிநிதிகள், தம் கலப்பினத்தன் அதிமொழியாகிய வடமொழியை வழிபாட்டு மொழியாக்கி, தெலுங்குப் பிராமணர்களையும் தமிழகம் எங்கும் குடியமர்த்தினர்! இவ்வாறு, பல்லவர் காலத்தில் மெல்ல நுழைந்த வடமொழி, விஜயநகரப் பேரரசின் காலத்தில் தலைதூக்கி நிமிர்ந்து நின்றது! கோயில்களில் எல்லாம் தமிழை மறைத்து, வடமொழியே ஒலித்தது!

செந்தமிழ் குமரன் நின்று அருள்புரியும் பழனியில், ராமயைன் என்கிற விஜயநகர மன்னனின் பிரதிநிதி வழிபாட்டுக்காகக் கலந்து கொண்டதாகவும், அங்கு நடைபெற்ற தமிழ்மறை மந்திர வழிபாட்டை நிறுத்தி, வடமொழி வழிபாட்டை ஆரம்பித்து வைத்ததாகவும், செப்பு பட்டயம் ஒன்று செய்தி சொல்கிறது! அதிகாரத்தை பெற அழைத்தவர்களால் தாம் அடிமைப்பட்டதை உணர்ந்தும், உணராது சிற்றரசர்கள் ஆட்சி புரிந்தனர்! கோயில்களில் இருந்த ஏராளம் தேவாரக் கல்வெட்டுக்களும், தமிழ் மந்திர ஏடுகளும், 'குகையிடிகலகத்தை' சாட்டாக வைத்து இடித்தும் எரித்தும் அழிக்கப்பட்டதாக வரலாற்று ஆய்வாளர்கள் சொல்வார்கள்!

என்ன துயரம் வந்த போதும், தில்லையில் தேவாரங்கள் ஏடுகளில் ஊறிக்கிடந்தன! நம்பியாண்டார் நம்பியையும், இராராஜசோழனையும் எதிர்பார்த்துக் கிடந்தன! காலம் கறையானிடம் கொடுத்தது போக, மிகுதியை எம் கைகளில் கொடுத்த போதும், களப்பிரரும், பல்லவரும், விஜயநகரப் பேரரசும் ஏற்படுத்திய வழிபாட்டு முறையில் இருந்து முற்றாக எம்மால் வெளியே வரமுடியவேயில்லை! தமிழ் இரண்டாம் நிலையே பெற்று கருவறைகளுக்கு வெளியே ஒலித்தது! ஓதுவார்களும், ஆய்வளர்களும், பதிப்பாசிரியர்களும் காலத்துக்கு காலம் தம் உயிரையும், வாழும் நாளையும் உருக்கி தமிழ் மந்திரங்களைத் தலைமுறை தாண்டியும் கடத்தி வந்தனர்!

ஒரு பகுதியினருக்கு மட்டுமே மந்திரம் ஓதும் தகுதி உண்டு என்ற இடைவந்த இழிநிலையைத் தலைநிலையெனக் கருதியும் ஒருசிலர் தம்பட்டம் அடித்து வணங்கியதை, சேக்கிழார் தன் தேடலின் தெளிவால், பெரியபுராணம் என்கிற தெய்வநூலைத் தந்து தகர்த்தெறிந்தார்! இறைவனை அடைய சாதியும், தொழிலும் தடையில்லை என்றதை இச்சமூகம் அறிந்தது ஆயினும், தெளிவு பெற மிக நீண்டகாலம் தேவைப்பட்டது! வடமொழி ஓதுவது அதிகாரம் என்றும் அது பிராமணர் அல்லாதவர்க்கு இல்லை என்றும் காலாகாலமாக நிலவிய ஆதிக்கம் கடந்த ஆண்டுகளில் இளகியே போனது! எந்த அதிகாரம் தமிழைத் தள்ளிவைத்ததோ, அந்த அதிகாரம், இறைத் தமிழைத் திருத்தலக் கருவறைகளில் ஒலிக்க ஆணை பிறப்பித்திருக்கிறது! அண்மைய செய்திகளின்படி, ஆரியப் பிராமணர் சிலர், 'இதனால் தாம் மன உளைச்சல்' அடைவதாகப் பொதுவெளியில் பகிர்ந்திருந்தாலும், கோடிக்கணக்கான தமிழ் உள்ளங்கள் இனிப் புரியும் மொழியில் இறைமொழி கேட்கத் தம் செவிகளில் தேன்தமிழ் பாயத் தென்னாடுடைய சிவனை போற்றி வணங்குவார்!

திருச்சிற்றம்பலம்

# அன்றும் இன்றும் மானிப்பாயில் மதமாற்றத்தினை தடுக்கும் காப்பு அரண்

## மானிப்பாய் இந்துக் கல்லூரி




**அதிபர்கள் தங்கள் பெயரை வைக்காமல் சமயக்குரவர்களின் பெயரை இல்லங்களின் பெயர்களாக அலங்கரித்து மகிழ்ந்த பெருமை மானிப்பாய் இந்துவையே சாரும்.**

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கிறித்தவ மிசனறிமார்களால் மேற்கொள்ளப்பட்ட சமயப் பிரச்சாரம் காரணமாகப் பெருந்தொகையான இந்து, பௌத்த மக்கள் கிறித்தவ மதத்தைத் தழுவிக் கொண்டனர். இக்கால கட்டத்தில் ஆங்கிலக் கல்விக்கும், கிறித்தவ சமயத்திற்குமே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இதனால் ஆங்கிலக் கல்வியைப் பெறவேண்டும் என்ற நோக்குடன் இந்து, பௌத்த சமயத்தவர்கள் மிசனறிப் பாடசாலையில் கல்வி கற்பதில் நாட்டம் கொண்டனர். இக்கால வேளையில்

**"தோன்றிற்புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற்தோன்றாமை நன்று"**

என்ற பொய்யாமொழிக்கிணங்க அவதரித்த நாவலர் பெருமான் இம்மத மாற்றத்திற்கு எதிரான சைவ சமய ஆதரவு நடவடிக்கையினை மேற்கொண்டார்.

இக்கால கட்டத்தில் மானிப்பாய் இந்து சமயச் சூழலில் ஆங்கிலம் மூலம் கல்வி கற்பிக்க ஏற்ற பாடசாலை இல்லாக்குறை, மானிப்பாய் வாசிகளால் உணரப்பட்டது. இவ்வுணர்வு 1910ம் வருடம் மானிப்பாய் விவேகானந்த மண்டபத்தில் திரு. மைரோன் பிலிப்ஸ் (Myron Phelps) என்பவரால் ஆற்றப்பட்ட உரையினால் ஊக்குவிக்கப்பட்டது. இதனால் மானிப்பாயில் உள்ள வசதிமிக்க சிலர் எஸ். கே. லௌடன் (Lowdan) அவர்கள் தலைமையில் ஒன்றுகூடிப் பாடசாலை கட்ட பணம் சேர்க்கத் தொடங்கினர். இக்குழு முதலாவதாகச் சந்தித்த நபர் திரு. வே. சங்கரப்பிள்ளை அவர்களாவார். மானிப்பாயின் முன்னணி வதிவிடராகத் திகழ்ந்த திரு. வே. சங்கரப்பிள்ளை அவர்கள் கட்டிடங்களுக்குத் தேவையான காணியையும் பெருந்தொகைப் பணத்தையும் அளித்து இம்முயற்சிக்குப் பெரும் ஊக்கமளித்தார்.

இதன் பின்னர் சமூகப் பெரியோர்களால் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டு திரு. வே. சங்கரப்பிள்ளை அவர்கள் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். அன்றைய கூட்டத்தில் அவரால் பாடசாலைக்கான அத்திவாரக் கல் பிரதம நீதியரசர் ஜோசப். ஹட்சின்சன் (Joseph Hutchinson) அவர்களால் 1910 ஆடி மாதம் 4ஆம் திகதி நாட்டப்பட வேண்டும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. அதற்கிணங்க 1910ஆம் வருடம் ஆடி மாதம் 4ஆம் திகதி பிரதம நீதியரசர் ஜோசப். ஹட்சின்சன் அவர்களால் இக்கல்லூரியின் அத்திவாரக் கல் நாட்டப்பட்டது. கட்டிடம் பூர்த்தியானதும், அவ்வளவு காலமும் மானிப்பாய் விவேகானந்த மண்டபத்தில் இயங்கிய இப்பாடசாலை புதிய கட்டிடத்திற்கு மாற்றப்பட்டது. அன்று தொட்டு ஆடி மாதம் நான்காம் திகதியிலேயே கல்லூரி விளையாட்டுப் போட்டி நடைபெற்று வருகின்றது.

ஆரம்பத்தில் கட்சிசன் மண்டபமும் அதனுடன் இருந்த 6 வகுப்புக்களுமே காணப்பட்டன. மேல் மாடியுடன் கட்டத் தொடங்கிய இம் மண்டபம் திரு. வே. சங்கரப்பிள்ளை அவர்களின் மறைவினால் தனிக்கட்டிடமாகவே அமைந்துவிட்டது. அன்று அவர் விதைத்த விதைதான் இன்று முளைத்துப் பெருமரமாகி பூத்துக்காய்த்து கனித்து பெரும் பயனளித்துவருகின்றது.



நிறுவுனர்
சிவத்திரு. வ.சங்கரப்பிள்ளை

இவ்வாறு எழுச்சி பெற்ற எமது கல்லூரியின் முதல் அதிபர் (1910ல்) திரு. எஸ். வீரசுவாமிப்பிள்ளை (B.A) ஆவர். இவர் மாணவரின் ஒழுங்கு கட்டுப்பாட்டில் அதிக கவனம் செலுத்தியவராவார். பிற்காலத்தில் இராமநாதன் கல்லூரி அதிபராகவும் தர்ம அசோகக் கல்லூரியின் கணிதப் பேராசிரியராகவும் கடமையாற்றியவர். அவரைத் தொடர்ந்து 1911ல் திரு. பி. சபாபதிப்பிள்ளை (B.ALT) அவர்கள் மூன்று ஆண்டுகள் இரண்டாவது அதிபராகப் பணியாற்றினார். 1911இல் திரு. ஜி. சிவராவ் (B.ALT) அவர்கள் அதிபரானார். இவர் சிறந்த கல்வி நிர்வாகியாவார்.

1914இல் திரு. பி. சபாபதிப்பிள்ளை B.A, திரு. ஆ. சபாரட்ணசிங்கி B.A ஆகியோர் கல்லூரியின் அதிபர் பதவியை வகித்தனர். திரு. சபாரத்தின சிங்கி அவர்கள் இணைப் பாடவிதான செயற்பாடுகளுக்கு முக்கியம் கொடுத்தார்.

(05ஆம் பக்கம் பார்க்க)

**இப்பகுதியில் உங்கள் பாடசாலையின் வரலாறு இடம்பெறவேண்டுமாயின் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமல் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.**

தென்னாடு செந்தமிழாகம சிவமடம்
குளங்கரை வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் : thennavan@thennadu.org

# அன்றும் இன்றும் மானிப்பாயில் மதமாற்றத்தினை தடுக்கும் காப்பு அரண்...



(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவரைத் தொடர்ந்து 1915 தொடக்கம் 1916 வரை பொறுப்பினை திரு. டீ. பி. ஹட்சன் பரமசாமி (Hudson Paramasamy - M.A FRHS) அவர்கள் பணிபுரிந்தார். அவரது காலத்திலேயே தான் பழைய மாணவர் சங்கம் உருவாக்கப்பட்டது.

கல்லூரியின் அடுத்த அதிபர் திரு. ஜே. ஹ. குரோசெட் (Crosette - M.A FRHS) அவர்கள் 1917 தொடக்கம் 1920 வரையான காலப்பகுதியில் கடமையாற்றினார். இவர் இந்துக் கல்லூரியின் தரமானது, பட்டினத்துப் பெரும் கல்லூரிகளுடன் ஒப்பிடக் கூடியதாய் உயர்த்தப்பட வேண்டும் என்று எண்ணி பெரிய விளையாட்டு மைதானத்தினை உருவாக்கினார். பல வகுப்பறைகளையும் இலக்கிய மன்றம், சாரணர் இயக்கம் என்பவற்றினையும் ஏற்படுத்தினார். இவரது காலத்திலே தான் இக்கல்லூரியின் முதற் சஞ்சிகை வெளிவந்தது. இவரது காலம் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் மேன்மைக்கு வித்திட்ட காலம் எனலாம்.

இவரின் சேவையைத் தொடர்ந்து 1920 ஆம் வருடம் அமரர் எம். சிவபாதசுந்தரம் (B.A) அவர்கள் இக்கல்லூரியின் அதிபர் பதவியை அலங்கரித்தார். இக்காலப் பகுதியில் தமிழும் சைவமும் முதலிடம் பெற்றது. 1921-1922 வரையான காலப் பகுதியில் அடுத்த அதிபராக சுவாமி வியுலானந்தர் (B.Sc) அவர்கள் பணியாற்றினார். இக்காலப் பகுதியில் பொதுப் பரீட்சை, விளையாட்டுத் துறை, சமயத்துறையில் இக்கல்லூரி பெருமை பெற்றது. இதன் பின் திரு. வி. வீரசிங்கம் (B.A.J.P, M.B.E) அவர்கள் 1922 - 1951 வரையான காலப் பகுதியில் அதிபராக சேவையாற்றினார். இக்காலம் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பொற்காலம். இவரின் தலைமையில் சலியாத உழைப்போடு ஆசிரியர்களும் மாணவர்களும் சேர்ந்து கைகோர்த்து நின்றதால் கல்லூரி பல மகத்தான சாதனைகளையும் வெற்றியையும் பெற்று வீறுநடை போட்டது. இவருடைய காலத்தில் 1923இல் இலச்சினை (Crest) வடிவமைக்கப்பட்டது. இது நான்கு பிரிவுகளைக் கொண்டது. மத்தியில் இலங்கைப் படம் உண்டு இந்நான்கு பிரிவுகளாவன

ஓலைச்சுவடி - கலையையும்
ஓம் - ஆன்மாவையும்
தாமரை - இதயத்தையும்
கை - வலிமையையும் குறிக்கும்

இவற்றின் ஒன்றிய செயற்பாட்டின் மூலம் இலங்கை ஒளி பெறுகின்றது என்பது இவ் இலச்சினையின் அர்த்தமாகும். விளையாட்டுத் துறையில் திரு. வி. வீரசிங்கத்தின் காலம் உன்னத காலமாக விளங்கியது. 1924ல் நான்கு இல்லங்கள் அமைக்கப்பட்டு, அவற்றிக்கு சமயக்குரவர் நால்வரின் பெயர்களை சூட்டி இல்ல விளையாட்டு போட்டிகள் நடாத்தப்பட்டன. இவரது காலத்தில் (1944இல்) தான் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் பெண் மாணவிகளும் அனுமதிக்கப்பட்டனர். இவரது காலத்தில் தான், வாகீசர் ஊர்வலம் சிறப்புப் பெற்றது. அதாவது வாகீசர் (அப்பர் சுவாமிகள்) குருபூசை தினத்தன்று வாகீசரின் திருஉருவப்படம் ஊர்வலமாக சங்கரப் பிள்ளை வீதி, யாழ் வீதி, மூத்த நயினார் வீதியூடாக பாடசாலை வந்தடையும். இதில் என்ன சிறப்பு என்றால், இது பாடசாலையுடன் சம்பந்தப்பட்ட நிகழ்வு மாத்திரமன்று. மானிப்பாய் முழுவதும் கொண்டாடும் பெருவிழா. திருஉருவப்படம் செல்லும் வழியிலுள்ள அத்தனை வீடுகளிலும் பந்தர் இட்டு, நிறைகுடம் வைத்துக் கொண்டாடும் அற்புதத் திருவிழா, ஊரையும் பள்ளியையும் இணைத்த பெரும்பாலம்.

இவரைத் தொடர்ந்து திரு. சி. நவரட்னம் (B.Sc) அவர்கள் 1951 - 1955 வரையான காலப் பகுதியில் அதிபரானார். நான்கு ஆண்டுகள் கடமையாற்றினாலும், இவர் காலத்திலேயே பெண்கள் கல்லூரிக்கெனப் புறம்பாக கட்டிடம் அமைக்கப்பட்டது. கல்லூரிக்கு மேற்குப் புறமாக அமைந்த 14 பரப்புக் காணி வாங்கப்பட்டு, விளையாட்டு மைதானம் பெரிதாக்கப்பட்டது. 1954ஆம் வருடம் மேலும் 13 பரப்புக் காணி பழைய மாணவர் சங்கத்தால் வாங்கப்பட்டது. 7 அறைகள் கொண்ட செல்லமுத்து மண்டபம், வாகீசர் மண்டபம் என்பன கட்டப்பட்டன. மேலும் பட்டம்மாளின் இசைக் கச்சேரி மூலம் கிடைத்த பணம் கொண்டு, உயிரியல் ஆய்வுகூடம் கட்டப்பட்டது. இது திரு. வி. வீரசிங்கம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. பல்கலைக் கழகங்களுக்குச் செல்லும் இரு மாணவர்களுக்கான மகாதேவா புலமைப் பரிசில் இக்காலத்திலேயே வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து திரு. கே. முத்துவேற்பிள்ளை (B.Sc.Dip.in.Edu) 1955 - 1972 வரை பணிபுரிந்தார். இவர் காலத்திலேயே பல புதிய கட்டிடங்கள் எழும்பின. ஏறக்குறைய 16 பரப்புக் காணி கல்லூரிக்கு கிழக்குப் புறமாக வாங்கப்பட்டு, பெண்கள் பகுதி பெரிதாக்கப்பட்டது. 1959இல் பேராசிரியர் சின்னத்தம்பி (பழைய மாணவர்) நவீன வசதி கொண்ட நூல் நிலையத்தை அமைத்துக் கொடுத்தார். ஆரம்பப் பாடசாலைக்கென மஸ்கன் நிறுவனம் (Mascon Ltd) ஒரு கட்டிடம் அமைத்தது. வாகீசர் மண்டபமும் மூத்ததம்பி கட்டிடத் தொகுதியும் முத்துவேற்பிள்ளை மண்டபத்தில் இணைந்தது. திரு. சிவதாசன் அவர்களின் மறைவையொட்டி அவர் நினைவாக அவர் பெயரில் பார்ப்போர் கூடம் நிறுவப்பட்டது. 1963இல் பெண்கள் பிரிவு தனிப்படுத்தப்பட்டது. இவ்வளவும் அதிபர் முத்துவேற்பிள்ளையின் விடா முயற்சியும் அயராத ஊக்கமும் என்றால் மிகையாகாது. இவரது காலத்தில் வைத்தியத்துறை, பொறியியற்துறைக்கு பெருமளவு மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர். பல காலமாகக் கல்லூரி மட்டத்தில் நடந்த நாடகப் போட்டி இவர் காலத்திலேதான் நாடக விழாவாக்கப்பட்டு, பொதுமக்கள் பார்வைக்கு வசதி செய்யப்பட்டது. இதனால் நிறுவுனர் தினவிழா மூன்று நான் விரிவுபடுத்தப்பட்டது.

1972இல் திரு. எம். பேராயிரவர் (B.A) அவர்கள் அதிபர் பதவியேற்றார். இவர் காலத்தில் (1973இல்) மாணவர் விடுதி அமைக்கப்பட்டு 30க்கு மேற்பட்ட மாணவர்கள் இங்கு தங்கியிருந்தனர். மரவேலை, உலோக வேலைக்கு ஒரு கட்டிடத் தொகுதி அமைக்கப்பட்டது. இவரது காலத்தில் உயர்தர வகுப்புகளுக்கு வணிகத்துறை ஒரு பகுதியாக்கப்பட்டு அதற்கெனத் திறமை வாய்ந்த ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். 1959ஆம் வருடம் புதுடெல்லியிலும் 1963இல் இந்தோனேசியாவிலும் நடந்த சர்வதேச் கல்வி மாநாட்டில் இலங்கைப் பிரதிநிதியாகக் கலந்து கொண்டதன் மூலம்




எமது கல்லூரிக்கும் நாட்டிற்கும் பெருமை தேடித் தந்தார். 04.04.1979இல் கல்லூரி நிறுவுனர் வே. சங்கரவேற்பிள்ளை அவர்களின் சிலையை நிறுவி தன் நன்னிலையைக் கல்லூரித் தாய்க்கு சமர்ப்பித்து 30.06.1979இல் தனது அதிபர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார்.

1979 - 1983வரை கல்லூரி அதிபராக திரு. எஸ். டீ. சாறி (B.Sc) அவர்கள் கடமையாற்றினார். இக்காலத்திலேயே தான் மஸ்கன் தொழினுட்பக் கட்டிடம் நிறுவப்பட்டது. பாடசாலைக் கட்டிடத் தொகுதியில் இரண்டு மாடிகள் பூரணப்படுத்தப்பட்டன. கல்லூரியின் அலுவலகத்திற்கென அதிபர் வீரசிங்கம் நினைவாக இரு மாடிக் கட்டிடம் நிறுவப்பட்டது. கொழும்பு மஸ்கன் நிறுவனமும், அஸ்பெஸ்டஸ் சீமேந்து நிறுவனமும் இணைந்து “மஸ்கன் தொழினுட்பக் கூடம்” ஒன்றினை அமைத்துப் பாடசாலைக்கு உதவியுள்ளமை வரப்பிரசாதமாகும்.

1983ல் திரு. வி. சுந்தரலிங்கம் (B.Sc.Dip.in.Edu) அவர்கள் குறுகிய கால வேளையில் கல்லூரியின் பதில் அதிபராகச் சிறப்பாகக் கடமையாற்றியுள்ளார். திரு. எஸ். வி. மகேசவேலு (M.A.Dip.in.Edu) 1983 - 1989 வரை அதிபர் பணியை வகித்தார். இவர் காலத்தில் தான் முறைசாராக் கல்வி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு வெற்றிகரமாக படவரைஞர், ஆங்கிலத் தட்டச்சு, சுருக்கெழுத்துப் பயிற்சி நெறிகள் இயங்கிக் கொண்டிருந்தன. சாறியின் மேல்மாடிக் கட்டிடம் இவர் காலத்திலேயே பூர்த்தியடைந்துள்ளது. கல்லூரியின் பவளவிழா 1986ஆம் வருடம் அதிபர் மகேசவேலு அவர்கள் அதிபராக இருந்த காலத்திலேயே கொண்டாடப்பட்டது. 1989 - 1996வரையான காலப் பகுதியில் திரு. சி. கேசவராயன் (B.A.Dip.in.Edu, M.A.Ed) அவர்கள் அதிபராகக் கடமை புரிந்தார். மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வரலாற்றிலேயே கொத்தணி அதிபராகக் கடமையாற்றிய பெருமை இவரையே சாரும். இவருடைய காலத்தில் பாடசாலைக் சுற்று மதில் கட்டப்பட்டது. பாடசாலையில் பாண்ட் வாத்தியக்குழு இவராலேயே முதன்முதலில் ஏற்படுத்தப்பட்டது.

திரு. கு. சண்முகநாதன் (SLPS1-B.A.Dip.in.Edu, MA.Edu) அவர்கள் அதிபராகக் கடமை புரிந்தார். இவர் சமய தத்துவங்களில் மிகுந்த நம்பிக்கை கொண்டவர். கணினிக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து கணினி அறையை அமைத்துக் கொடுத்தார். இவரால் பாடசாலை முகப்பில் சரஸ்வதி உருவச்சிலை அமைத்தது குறிப்பிடத்தக்கது. நவீன நூல் நிலையம் ஒன்றும் இவரது காலத்தில் அமைக்கப்பட்டது. மேலும் பு.வு.ணு உதவியுடன் தொடர் மலசலகூடத்தினை ஏற்படுத்திக் கொடுத்தவராவார்.

2003-2005 வரையான காலப் பகுதியில் திரு. க. ஜெகநாதன் (SP.Trd.Sc.SLTS 1) அவர்கள் பதில் அதிபராகக் கடமைபுரிந்தார். இவர் பல்வேறு இடர்ப்பாடுகள் மத்தியிலும் குறுகிய கால சேவையில் பாடசாலைக்குச் சிறப்பாகப் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. 2005 முதல் 2015 வரை திரு. ச. சிவநேஸ்வரன் அவர்கள் (SLPS1,B.Com(Hons), Dip.in.Edu, M.Ed) எமது கல்லூரியின் அதிபர் பதவியை அலங்கரித்துக் கொண்டிருந்தார். கல்லூரியின் முன்னேற்றத்திற்கும், அபிவிருத்திக்கும் தனது அறிவைச் சிறந்த முறையில் பயன்படுத்தி இன்று கல்லூரி புத்தெழில் பெற்று ஓங்கி நிற்க இவர் முக்கிய காரணமாவார். இவர் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் என்பவற்றுடன் இணைந்து கல்வி, விளையாட்டு மற்றும் ஏனைய செயற்பாடுகளுக்கும் தேவையான நிதியையும், உதவியையும் பெற்றுக் கட்டிடங்கள், நவீன கற்றல் வசதிகளை உருவாக்கி ஆசிரியர் - மாணவர்களது கற்பித்தல் - கற்றல் செயற்பாட்டிற்கு உறுதுணையாக இருந்து வந்தவர்.

அதிபர் சிவநேஸ்வரன் அவர்களது காலம் மீண்டும் மானி அன்னைக்கு உன்னதமான பொற்காலம் என்றே கூற வேண்டும். சகல துறைகளிலும் அன்னையானவள் புதியதோர் பாதை நோக்கி வீறுநடை போட்டுக் கொண்டிருக்க செய்தவர். மாணவர்கள் தொகை 450இலிருந்து 1000க்கு மேலாக அதிகரித்துவிட்டது. பாடசாலைக் கட்டிடங்களில் துரித முன்னேற்றம் ஏற்பட்டது. இவருடைய காலத்தில் தான் சு.ஏ.ஆறுமுகம் விளையாட்டரங்கு, துரைராஜா திறந்தவெளி அரங்கு, மித்திரன் அரங்கு, சிவதாசன் அரங்கு, பிரார்த்தனைமண்டபம் (1990-91இல் ஆரம்பிக்கப்பட்ட கனடா பழைய மாணவர் சங்கம்). முதலியார் மகேசன் மண்டபம் போன்றவை அமைக்கப பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. மருத்துவ, பொறியியல், வர்த்தக, கலைத்துறை போன்றவற்றிற்கான பல்கலைக்கழக அனுமதியை பெருமளவு மாணவர்கள் பெற்றனர். க.பொ.த. சாதாரணம் 65மூ சித்தி வீச்சினையும், க.பொ.த. உயர்தரம் 75% சித்தி வீச்சினையும் பெற்று பரீட்சையில் உயர் வளர்ச்சி பெற்றனர்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக 2007ல் உதைபந்தாட்டத்தில் தேசிய மட்டத்தில் தடம் பதித்து மூன்றாம் இடத்தைப் பெற்றமையும், 2009ல் தங்கப் பதக்கம் பெற்றமையும் அதிபர் சிவநேஸ்வரன் அவர்கள் காலத்திற்குரியதே. இதனூடாக யாழ்ப்பாண பாடசாலை உதைபந்தாட்ட வரலாற்றில் கடந்த 50 வருடகாலப் பகுதியில் தேசிய மட்ட வெற்றியைப் பெற்று சாதனை படைத்துள்ளது. இப்பெருமை நூற்றாண்டு விழாக் காலப் பகுதியில் பெற்றமை கல்லூரிச் சமூகத்தால் மறக்க முடியாத மகிழ்வான நினைவுப் பதிவாகும். மாணவர்களின் ஒழுக்க விழுமியங்களில் அதிக அக்கறை கொண்ட இவர் சகல மாணவர்களும் எல்லாத்துறைகளிலும் சிறந்து விளங்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். பாடசாலைக் கவின் நிலையைச் சிறப்பாக்குவதில் ஆர்வம் கொண்ட இவர், தாய் தன் பிள்ளைகளை நேசிப்பது போல மனதில் பசுமையை ஏற்படுத்தக் கூடிய பூஞ்சோலையை வளர்த்து எம் தாயை அலங்கரிப்பதில் ஆர்வம் கொண்டவர்.


இவரது காலப்பகுதியில் பாடசாலையில் காலடி வைக்கும் போது “வாடிய பயிரைக் கண்டு உள்ளம் வாடிய இராமலிங்க அடிகளார்” இங்கே ஊடுருவி நிற்கின்றாரோ என்று எண்ணத் தோன்றும். இவரைத் தொடர்ந்து, 20.05.2018 வரை பிரதி அதிபர் மே.இந்திரபாலா அவர்களும், இவரைத் தொடர்ந்து, 22.09.2020 வரை சி.இந்திரகுமார் அவர்களும், இவரைத் தொடர்ந்து, 23.09.2020 தொடக்கம் இன்று வரை அதிபர் செ.இளங்கோ அவர்களும் பாடசாலை வளர்ச்சியிலும் மாணவர்களின் முன்னேற்றத்திலும் உயர்வை காண அரும்பாடுபட்டு, மானி மண்ணின் மகிமையை உலகரியச் செய்துள்ளனர்.

பாலாவியின் கரைமேல் செத்தாரின் எலும்பு அணிபவனான திருக்கேதீச்சரத்தானின் பெருந்திருவிழாவின் தேர்த திருவிழாவின் முன்னைநாள் திருவிழா மானி அன்னைக்கு உரியதாகும். அதற்கு, ஊர்கூடி உவந்து அளிக்கும் பண்டங்கள் கொண்டு, ‘அரோகரா ‘ என்ற சத்தம் வானைப்பிளக்க புறப்பட்டு, கேதீச்சரநாதனிடத்தில் அன்னதானத்தை அமர்க்களமாக நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இன்று மானி அன்னையானவள் கல்வி, ஒழுக்கம், விளையாட்டு, பசுமையான சுற்றுச்சூழல் எனப் பல அணிகலன்களைத் தாங்கி ஒரு மாதிரிப் பாடசாலையாகப் பரிணமித்து நிற்கின்றாள். இவ் அன்னையின் எழுச்சி அடுத்த நூற்றாண்டு கல்விப் பயணத்தில் மாணவர்களை வளப்படுத்தி மானிப்பாய் இந்துக் கல்லூரியை மீண்டும் மலர்ச்சியடைய வைப்பதுடன், யாழ்ப்பாணக் கல்விப் பரப்பிற்கு வழிகாட்டும் ஒளியாகவும் திகழ்வாள்.

திருச்சசிற்றம்பலம்

# வாழ்வாங்கு வாழ்ந்தவரை வாழும்போது வாழ்த்துவோம்

# பவள விழாக்காணும் இரத்தினம் இராமநாதன்



**உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கரிய** திருத்தொண்டர் இயல்பை உள்ளவாறு உணர்ந்து, இனிமையாக எடுத்து ஓதுதல் தெய்வச் சேக்கிழார்க்கல்லாது தேவர்களுக்கும் அரிது. அவ்வாறு விரித்து ஓதிய திருத்தொண்டர் பெரும் புராணத்தில் செறிந்து கிடக்கும் விழுமிய சொற்பொருள் திட்ப நுட்பங்கள் பல. இத்தகைய எளிமையும், அருமையும் ஒருங்கு படைத்த இப்பெரியபுராணத்திற்கு சொல் வடிவம் கொடுக்க எண்ணம் கொண்டும், செம்பாகமாய் பலர்க்குப் புலப்படுத்தும் பொருட்டும், மக்களை ஒளிநிறையில் செலுத்தும் பொருட்டும், தொண்டைமான் தமையன், சேக்கிழார் பெருமானுக்கு மாநாடு நடத்திய பெருமகனாரே! பவளவிழாக் காணும், சைவ சித்தாந்த இரத்தினம் சிவத்திரு. வைரமுத்து இரத்தினம் இராமநாதன் ஐயா அவர்கள்.

எண்ணிலடங்காத பணிகளைச் செய்தும், செய்து கொண்டுமிருக்கும் இவர், ஈழத்தில் தெல்லிப்பளையில், பன்னாலை கிராமத்தில், சயம்புநாதர் வைரமுத்து இரத்தினம் - செல்வநாயகி தம்பதி பெற்ற மூன்று இரத்தினங்களில் நடுமுத்து ஆவார். பெற்றவர்களிடம் இருந்து தான் பிள்ளைகளின் பண்புகள் தோன்றுகின்றன என்பது இந்த முத்துக்களுக்கு முழுக்க முழுக்கப் பொருந்தும். **“ஊரார் வீட்டுப் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்”** என்ற தன் தந்தையிடமிருந்து படித்த பாலபாடம் தான், இவரது சேவையின் ஆரம்ப பாடம்.

தமிழன் என்ற தன்மான உணர்வும், சைவ சமயச் சிந்தனையும், பணியும் அவரது சிறுவயதிலிருந்தே இரண்டறக் கலந்து வளர்ந்தது. கொழும்பு பொரளையில் வெஸ்லி கல்லூரியில் (1956) ஆறாம் தரத்தில் படிக்கும் போதே, ‘பூங்கா” என்ற கையெழுத்து சஞ்சிகையை தன்னோடு பள்ளியில் படித்த விமல் சொக்கநாதன், திருச்செல்வம், தன் சகோதரர் பத்மநாதன் போன்றவர்களுடன் வெளியிட்டார். 1958இல் இனக்கலவரம் கொழும்பில் வெடிக்க, அவர் பெற்றோருடன் யாழ்ப்பாணம் சென்று, தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியில் எட்டாம் தரத்தில் சேர்ந்து, அங்கேயே படிப்பைத் தொடர்ந்தார். அக்காலத்தில், சாரண இயக்கத்தில் சேர்ந்து, சேவை உள்ளத்தை முழுமையாக்கிக் கொண்டார். கிராமத்தில் சமய, சமூக, அரசியல் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அந்தச் சிறுவயதிலேயே, சாதிக் கொடுமைக்கு எதிராக, அவர் தம் நண்பர்களுடன் சேர்ந்து நடத்திய போராட்டம், பல உறவுகளையும் பெரியவர்களையும் சினத்தில் ஆழ்த்தி ஆரவாரமில்லாமல் ஆர்ப்பரித்து வெற்றி கண்டார்.

பன்னாலை மயிலை ஞான வைரவர் கோயிலில், கூட்டுப் பிரார்த்தனைச் சபை ஒன்றை ஆசிரியர் கா. கதிர்காமத்தம்பியின் உதவியுடன் ஆரம்பித்து, அதன் செயலாளராக இராமநாதன் தெரிவாகினார். அப்பணியை ஆரம்பித்த போது, அவருக்கு 14 வயது கூட இல்லை. இக்கோயிலில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கூட்டுப் பிரார்த்தனை செய்தும், அவ்வப்போது சிறந்த பேச்சாளர்களை அழைத்துச் சமயச் சொற்பொழிவுகள், கதாப் பிரசங்கங்களை நடத்தியமை, இவர் சிறுவயதில் சைவத்தமிழ் மீது கொண்டிருந்த அன்பை பறைசாற்றி நிற்கின்றது. இது பொதுவாழ்விலும், சமயப் பணியிலும், இவருக்கு அனுபவ அரங்காக அமைந்தது. சேக்கிழார் அருளிய பெரிய புராண 63 நாயன்மார்களின் வரலாறுகளை, வாரந்தோறும் கோயிலில் பேச்சாளர்களை அழைத்து சொற்பொழிவுகளாக வழங்க வைத்தார். 1964ம் வருடம் பெரிய புராண சொற்பொழிவு பூர்த்தியை **“சேக்கிழார் மாநாடு”** ஆக நடத்தி முடித்தார். அக்காலத்தில் கிராமசபை, பாராளுமன்ற தேர்தலில் தமிழரசுக் கட்சியின் தொண்டனாகவும் திகழ்ந்தார். இவரின் அரசியப்பணிகளுக்கு, தந்தை செல்வா தன் கையெழுத்தால் வழங்கிய சான்றிதழ் சாட்சி பகிர்கிறது.

1964 இறுதியில் யாழ்ப்பாணத்தில் இருந்து மீண்டும் கொழும்பிற்கு தொழில் பெற்றுச் சென்ற இவர், பத்தாண்டின் தொடர்ச்சியாக, அமரராகிவிட்ட க. பாலசுப்பிரமணியத்தின் உரிமையான உறவோடு கொழும்பு கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கத்தில் பொருளாளராக இணைந்தார். இவர் 1953இல் கொழும்பு கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கத்தினால், ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெற்று வந்த சைவ சமய பாடசாலை கற்பித்தலில் தனது 7 வயதில் சைவ சமயப்பாடம் கற்கத் தொடங்கிய காலத்திலேயே சங்கத்தோடு இணைந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் பொருளாளராக கடமையாற்றிய காலப்பகுதியில் தான், நால்வர்க்கு திருக்கோயில் அமைக்கப்பட்டு, சிலை வடித்து நிறுவப்பட்டது. இவரது காலத்தில் தான் சங்கத் புகழ்ப் பரப்பும் தொண்டரணி சபை ஆரம்பிக்கப்பட்டு, சபைத் துணைத் தலைவராகவும் பணி செய்தார். நால்வர் பாடசாலை ஆசிரியராகவும், நால்வர் கொள்கைநெறிப் பரப்பும், நானிலம் போற்றும் **“நால்வர் நெறி மலர்”** இணை ஆசிரியராக இருந்து வெளியிட்டார். திங்களில் பிடி அரிசி சேர்த்து பிணியாளருக்கு உணவளித்தும், இல்லங்கள் தோறும் திருமுறைப் ஓதுதல் செய்தும், தெருவெல்லாம் திருவெம்பாவை ஒலிக்கச் செய்தார். இதுமட்டுமல்ல இத்தனைக்கும் மேலாக இவர் சேவைக்காலத்தில் தான், சங்கத்துக்கென ஓர் தனிப்பணிமனை இல்லையென்ற குறை நீங்கி ஓர் புது மண்டபம் அமைக்கவும் செய்தார். இவ்வாறு, கொழும்பில் தன்னலமற்ற பணிகளை நிறைவாக செய்துள்ளார்.

இவரின் தன்னலமற்ற சிவப்பணியை அந்நிய தேசத்திலும் ஆற்றப்படுத்துவதற்கு, இறைவனின் திருவருள் கூடியது. 1975ம் வருடம் தை மாதம்கொழும்பிலிருந்து மேற்கல்வி பெறுவதற்காக இராமநாதன் இங்கிலாந்து சென்றார். இவர் பிரிவைத் தாங்க முடியாமல் அழுத இதயங்கள் பல! இங்கிலாந்து சென்ற இவர் விஜயலட்சுமி என்ற நல்லாளை திருமணம் முடித்தார். இங்கிலாந்தில் விஜயலட்சுமி என்ற நல்லாளை இராமநாதன் மணமுடித்த அதே நாளில், கொம்பனித்தெரு சிவசுப்பிரமணிய கோயிலில், இராமநாதன் தம்பதிகள் இல்லாமலே இவர்களது திருமணக் கொண்டாட்டம் நடாத்தபட்டது ,இந்நிகழ்வு இவரின் தலைமைத்துவத்தையும், மாற்றோர் கொண்டிருந்த அன்பையும் பறைசாற்றுகிறது.

தமிழ் என்றும், சைவ முன்னேற்றச் சங்கம் என்றும், நாவலர் பாடசாலை என்றும், கோயில் என்றும், கொழும்பில் தன் பொழுதைக் கழித்த இராமநாதனுக்கு, இங்கிலாந்தில் ஏதோ ஒரு குற்ற உணர்வு இவரை வாட்டியது. இதனால் தனது வீட்டிலேயே (46, State Houses Road, Wickford), சைவ முன்னேற்றச் சங்கத்தின் இங்கிலாந்துக் கிளையை 1977 இல் எழுவருடன் நிறுவினார். கொழும்பில் இயங்கிய சைவ முன்னேற்றச் சங்கத்தின் உணர்வோடு, இங்கும் அந்தப்பணி தொடர வேண்டும் என்ற இவரது இலட்சியத்துக்கு உரம் சேர்த்தவர்களில் முக்கியமானவர் ஆனந்ததியாகர். அவரும் கொழும்பில் சங்கத்தில் செயல்பட்டவர். அவரோடு, இவரது உடன்பிறப்புகளான அண்ணன் வை.இ. பத்மநாதனும், தம்பி வை.இ. லோகநாதனும் இங்கு வந்து சேரவே, இராமநாதனின் எண்ணங்கள் படிப்படியாக ஈடேறத் தொடங்கின. ஒன்றா? இரண்டா? சைவ முன்னேற்றச் சங்கம் தோன்றிய பின்னர் செய்து கொண்டிருக்கும் பணிகள் பல்கிப் பெருகுகின.

அந்நிய நாட்டில் அந்நியப்பட்டு வாழ்ந்து கொண்டிருந்த எம்மவர்களுக்கு, மரணக்கிரியைகளை நமது பாரம்பரிய முறைப்படி செய்வதற்கு, முழுநேரமாகவே ஒரு குருவானவர், சைவ முன்னேற்றச் சங்கத்தின் முழுநேர ஊழியராக நியமித்து, ஏற்ற ஒழுங்குகளை செய்து தருகிறது சைவ முன்னேற்றச் சங்கம். இங்கிலாந்தில் வாழும் சிறார்களுக்கு சைவமும் தமிழும் கலைகளோடு சேர்த்துப் போதிக்க வேண்டும் என்ற இராமநாதனின் இலட்சியக் கனவுதான், நால்வர் பாடசாலையாக உருவானது. ஆன்மீகத்தினூடான சமூகத்தின் அவலங்களைப் போக்க ‘கலசம்’ என்ற இதழை சைவ முன்னேற்றச் சங்கத்தின் காலாண்டு இதழாக, 26 வருடகாலத்துக்கு முன் ஆரம்பித்து, அதன் நிர்வாகியாகச் செயல்பட்டு வருகிறார். இங்கிலாந்து சைவ முன்னேற்றச் சங்கத்தின் கடந்த நாற்பத்துநான்கு வருடகால அங்கத்துவ சேவையில் இராமநாதன் பொதுச் செயலாளர், பொருளாளர், அறங்காவலர், உதவித் தலைவர், தலைவர், வெளிநாட்டுத் துறைச் செயலாளர், கலசம் சஞ்சிகை நிர்வாகி என்று பலவேறு பதவிகளை வகித்து தற்போது காப்பாளர் பதவியை வகித்து தொண்டாற்றி வருகின்றார். இன்று ஐரோப்பாவில் ஒரு பலம் வாய்ந்த சைவ நிறுவனமாகத் திகழும் சைவ முன்னேற்றச் சங்கத்துக்கு ஒரு நிரந்தரப் பணிமனை வேண்டுமெனத் தீவிரமாக உழைத்து வெற்றியும் கண்டார்.

சைவ முன்னேற்றச் சங்கத்தின் வெள்ளிவிழா வருடத் தலைவராக இராமநாதன் தெரிவாகி, 2002ம் வருடம் இவரது தலைமையில் வெள்ளிவிழா நிகழ்ச்சிகள் வெள்ளமெனத் திரண்ட மக்கள் கூட்டத்திடையே கோலாகலமாக நிறைவு பெற்றது. தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் 1987ம் வருடம் இராமநாதன் உட்பட ஐவருடன் நிறுவப்பட்டு, இப்போது வியக்கத்தகு விதத்தில் இங்கிலாந்தில் வியாபித்து நிற்கிறது. தாய் மண்ணில் பெருமை சேர்க்கின்ற தமது பள்ளிக்கு அள்ளி அள்ளிக் கொடுக்கிறது சங்கம். சங்கத்தின் பொருளாளராகவும், நிர்வாக சபை உறுப்பினராகவும் கடந்த காலங்களில் பணி செய்த இராமநாதன், 2003ம் வருடம் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் பத்தாவது ஆண்டின் தலைவர் என்ற பெருமைக்குரியவரானார்.

இவரின் சேவைக்காக, “சைவ துரந்தரர்” - இந்து சமய கலாச்சார இராஜாங்க அமைச்சு - இலங்கை (1993),“ தொண்டர் திலகம்” - கொம்பனித்தெரு அருள்மிகு சிவசுப்பிரமணியர் கோவில் - இலங்கை (1996), “அறநெறிச் சீலர்” - அகில இலங்கை இந்து மாமன்றம் (2017), “ சைவ சித்தாந்த இரத்தினம்”- திருவாவடுதுறை ஆதினம் - தமிழ் நாடு (2015), “சிவநெறி செல்வர்” - வரசித்தி விநாயகர் ஆலயம் கனடா (2006), “சிவ நெறிக் காவலர்” - உலக சைவ பேரவை தென் ஆபிரிக்கா (1996), “சிவநெறி செம்மல்” - சிவயோகம் அறக்கட்டளை. இலண்டன் (2000), “சிவதமிழ் செல்வர்” - ரொறன்டோ வரசித்தி விநாயகர் ஆலயம் - கனடா (2004), “சமூக சீலர்” - பிரித்தானியா சைவ கோவில்கள் ஒன்றியம் (2004), “சைவநெறிக் காவலர்”- பிரித்தானிய சைவ முன்னேற்ற சங்கம் (2006), “ சிவத்தமிழ் நண்பி” - எசெக்ஸ் தமிழ் கழகம் - இலண்டன் (2016), “ பார்வைக் காவலர்” - நவஜீவன் கண் பார்வையற்றோர் அமைப்பு - திருப்பதி - ஆந்திரா (2010). “ தமிழ்ப்பணி செம்மல்” தேனமுத்த் தமிழ் மக்கள் நல அறக்கட்டளை - தமிழ் நாடு (2021) போன்ற பல பட்டங்களை வழங்கி வாழ்த்தியுள்ளனர்.

### பெரியபுராணத்தை ஆற்றுப்படுத்திய பணிகள்

1963 ம் வருடம் தனது கிராமத்தில் தனது குல தெய்வமாகிய பன்னாலை ஞான வைரவர் ஆலயத்தில் ஆரம்பித்த சேக்கிழார் சுவாமிகளின் - பெரிய புராண தொடர் விரிவுரையை 57 வருடங்களாக இலங்கையிலும், தற்போது இங்கிலாந்திலும் சைவ முன்னேற்ற சங்கத்தின் ஆதரவோடு செய்து வருகின்றார். (1963 -1964 )இலங்கை தெல்லிப்பளை பன்னாலை மயிலை ஞான வைரவர் கோயிலில் 72 வாரங்கள் தொடர்ச்சியாக பெரியபுராண 63 நாயன்மார்களையும் 9 தொகை அடியார்களின் வரலாறுகளை யாழ்ப்பாணத்தில் வசித்து வந்த ஆசிரியர்கள், சைவ பெரியார்களை கொண்டு சொற்ப்பொழிவு ஆற்ற வைத்து நிறைவில் இரு நாட்கள் சிறப்பாக மிகவும் பெரும் அளவில் “சேக்கிழார் மாநாடு” நடாத்தியமை குறிப்பிடத்தக்கது.மேலும் (1970 - 1971)இலங்கை கொழும்பில், பிரித்தானியா சைவ முன்னேற்ற சங்கத்தின் தாய் சங்கமாகிய கொம்பனித்தெரு சைவ முன்னேற்ற சங்கம் இயங்கி வந்த கொம்பனித்தெரு அருள்மிகு சிவசுப்பிரமணியர் கோயிலில் 72 வாரங்கள் வெள்ளிக்கிழமைகள் தோறும் பெரியபுரணச் சொற்ப்பொழிவுகள் நடத்தினார்.

இங்கிலாந்து சைவ முன்னேற்ற சங்கத்தின் வெள்ளி விழாவருட தலைவராக இருந்த காலத்தில் இங்கிலாந்தில் முதல் முறையாக வால்த்தம்ஸ்ரோ அருள்மிகு கற்பக விநாயகர் ஆலயத்தில் வெள்ளிக்கிழமைகள் தோறும் 72 வாரங்கள் பெரியபுராண விரிவுரைகள் நடார்த்தி, 2002ல் நடைபெற்ற சங்க வெள்ளி விழா வைபவத்தின் போது மேற்ப்படி ஆலயத்தில் இருந்து “பெரியபுராணம்” உட்பட 12 திருமுறைகளையும், இவர்களை பாடியவர்களில் முதன்மையான “நால்வர்” பெருமக்களையும் பல்லக்கில் அமர்த்தி, தொண்டர்கள் வீதியில் தங்கள் தோள்களில் கொடி, குடை, ஆலவட்டம், மற்றும் அலங்காரங்களுடன் சுமார் ஒரு மைல் தூரம் சுமந்து வந்து விழா மண்டபத்தை அடைந்து, மண்டப அலங்கார மேடையில் அமர்த்தி, பெரியபுராணத் தொடர் விரிவுரையின், இங்கிலாந்தில் முதற் சுற்றை விழா மண்டபத்தில் வீற்றிருந்த 1000க்கு மேற்பட்ட அன்பர்கள் முன்னிலையில் நிறைவு செய்தார்.

இரண்டாம் சுற்று (2003 - 2004) இலண்டன் அருள்மிகு முருகன் கோயிலில் வெள்ளிக்கிழமைகள் தோறும் 72 வாரங்கள், மூன்றாம் சுற்று (2005 - 2006) இலண்டன் செல்வ விநாயகர் கோயிலில் வெள்ளிக்கிழமைகள் தோறும் 72 வாரங்கள், நான்காம் சுற்று (2007 - 2008) என்பீல்ட் அருள்மிகு நாகபூசணி கோயிலில் வெள்ளிக்கிழமைகள் தோறும் 72 வாரங்கள், ஐந்தாம் சுற்று (2010 - 2011) அருள்மிகு சிவகாமசுந்தரி அம்பாள் உடனுறை சிதம்பரேசுவர் கோயிலில் வெள்ளிக்கிழமைகள் தோறும்72 வாரங்கள், ஆறாம் சுற்று (2016 - 2017) அருள்மிகு சிவகாமசுந்தரி அம்பாள் உடனுறை சிதம்பரேசுவர் கோயிலில் வெள்ளிக்கிழமைகள் தோறும் 72 வாரங்கள், ஏழாம் சுற்று (2020 - 2021) அருள்மிகு சிவகாமசுந்தரி அம்பாள் உடனுறை சிதம்பரேசுவர் கோயிலில் செவ்வாய்கிழமைகள், வெள்ளிக் கிழமைகள் தோறும் என 36 வாரங்களையும் மிகுதி 36 வாரச் சொற்பொழிவுகளை, இங்கிலாந்து சைவ முன்னேற்ற சங்கம் உலகெங்கும் பெரியபுராணத்தை பரப்பும் வகையில் கடந்த ஆவணி மாதம் 28ம் திகதி தொடக்கம் சூம் (Zoom) வாயிலாக பெரியபுராணத் தொடர் விரிவுரைகளை ஆரம்பித்து நடார்த்தி இவ்வருட வைகாசியில் இனிதாக நிறைவு செய்தது சிறப்பாகும்.

சிவத்திரு. வை. இ. இராமநாதன் ஐயா அவர்களின் சிவத்தமிழ் பயனாய் விளங்கும், சைவ முன்னேற்றச் சங்கத்தின் இங்கிலாந்துக் கிளையானது, நிதி திரட்டி இலங்கையில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பாடசாலை மாணவர்களின் கல்விச் செலவிற்கும் பல்கலைக்கழக மாணவர்களின் கல்விச் செலவிற்கும் பயன்படுத்தும் நோக்கில், “இராக சங்கமம்” என்னும் மெல்லிசைப் பாடல் நிகழ்ச்சியை கடந்த ஏழு ஆண்டுகளாக நடத்தி வருகின்றது. இவ்வருடமும், வரவிருக்கின்ற 06.11.2021 சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு சூம் (ZOOM) வாயிலாக நடாத்த இருக்கின்றமை சிறப்பாகும். இதனுடன், இதன் தாய்க் கிளையான கொழும்பு கொம்பெனித்தெரு சைவ முன்னேற்ற சங்கமானது, கடந்த வருடம் உலகை ஆட்டி படைக்கும், தீநுண்மிப் பரவலினால் அல்லலுற்ற மக்களிற்கு உணவுப் பொதிகள் வழங்கியதுடன், தொற்றாளர்களை தனிமைப்படுத்து வதற்கென, கொழும்பு சைவ முன்னேற்றச் சங்க நால்வர் மணி மண்டபத்தினை தற்காலிக தனிமைப்படுத்தல் நிலையமாக வழங்கியிருந்தமையும் இவர் திங்களில் பிடி அரிசி சேர்த்து பிணியாளருக்கு உணவளித்துக் காட்டிய வழியேயாகும்.

இவ்வாறு, செழுஞ்சைவம் தழைத்தோங்க லண்டனில் அளப்பறிய பணிகளை செய்து வரும் சிவத்திரு. வை. இ. இராம நாதன் ஐயாவின் பவள விழாவில் சைவ உலகுடன் சேர்ந்து யாழ்ப்பாணம் கொக்குவில் தென்னாட்டில் அருட்கோலம் பூண்டு இருக்கும் மனோன்மணித் தாயுடனான ஐம்பூதநாதாப் பெருமானின் திருவருள் கிடைக்கவேண்டி நாமும் வாழ்த்து கிறோம்.

**மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்**
**எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்**
**கண்ணில் நல்லஃதுறுங் கழுமல வளநகர்ப்**
**பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே**

**திருச்சிற்றம்பலம்**

# ஈழத்து சித்தர்கள்: தவத்திரு நவநாத சித்தர் சுவாமிகள்


**கொல்லிமலையில் இருந்து இலங்கை குயீன்ஸ்பரி வந்த நவநாதச் சித்தர் குயீன்ஸ்பரிக் குகையில் இருந்து திருவண்ணாமலைக்கு ஆகாயவழி சென்று வந்தார்.**

**சொல்லரிய சித்தர்குழாம் நிறைகொல்லிச் சிகரமதிற்**
**சுருதிமுடி வானஒளி வெளியை நாடி**
**அல்லலறுத் தானந்தப் பேரமுதம் அநுதினமும்**
**அருந்தியடி பணிந்தவரை அன்பாற் போற்றி**
**வெல்லரிய சித்திகளோ ரெட்டினையும் சிறுமகவு**
**போலியற்றிப் பித்தரைப்போல் வெளிவந் திந்நாள்**
**மல்லல்வளம் கரிகாலி நாகன்மனைக் கான்முளைகள்**
**வழுத்துநவ நாதனடி வணக்கஞ் செய்வாம்.**


**- சி. குருசாமி**



தென்னாட்டில் சித்தர் சிலை


சிறுமி வரைந்த சித்தர் படம்


சித்தர் சமாதி


சித்தர் தவம் இருந்த குகை

நாவலப்பிட்டிப் பட்டினத்திலிருந்து நுவரெலியா செல்லும் கொத்மலை வீதியில் பதின்மூன்றாவது மைல் தூரத்தில் உள்ளது குயீன்ஸ்பரி என்ற தேயிலைத் தோட்டம். அத்தோட்டத்தில் கொல்லிமலையடி கரிகாலியிலிருந்து வந்து குடியேறிய நாகன் குடும்பத்தினர் பெரியகங்காணியாக இருந்து வந்தனர். நாகனுடைய அன்பு மனைவியார் பெருமாள் அம்மையார் பத்தியிற் சிறந்தவர். வீட்டிற்கு வரும் அடியார்கள் அனைவரையும் சிவமாகவே பாவிப்பவர். பெருமாள் அம்மையார் அடியார் பத்தியிற் சிறந்து விளங்கியதோடு நிர்வாகத் திறமையிலும் வல்லவர். அம்மையார் வருடத்தில் பாதி நாட்கள் கரிகாலியிலும் பாதி நாட்கள் குயீன்ஸ்பரியிலும் காலம் கழித்து வந்தார்.

கொல்லிமலை, தமிழ் நாட்டில் சேலம் மாவட்டத்தில் நாமக்கல், ஆத்தூர்த் தாலுக்காக்களில் உள்ள குன்றுத்தொடர். இதற்குக் கொல்லி அறப்பள்ளி என்ற பெயரும் உண்டு. அம்மலை உச்சியில் உயிர்களுக்கு ஆன்ம ஞானமாகிய அகிம்சை தர்மத்தை அருள்செய்து, அஞ்ஞானத்தைப் போக்கும் ஞானவல்லியும், அறக்கடவுளும் விளங்கும் அறப்பள்ளிநாதர் சந்நிதி ஒன்று உண்டு. அறப்பள்ளிநாதர் சந்நிதி முன் முருகக் கடவுள் நிலைபெற்றுள்ளார். அம்மலையில் பல பெரிய குகைகள் இருக்கின்றன. அவற்றில் பல சித்தர் குழாங்கள் வசிக்கின்றனர்.

இவர்களில் ஒருவரே நவநாதசித்தர் என்ற பெயருடையவர். நீண்டகாலத் தவத்தினால் சித்தி பெற்றவர். ஒரே நேரத்தில் பல இடங்களில் தோற்றம் அளித்தவர். கொல்லிமலைச் சித்தர்களுள் மிகச் சிறந்தவராகப் போற்றப்பட்டவர். அயல் கிராமங்களிலுள்ள மக்கள் இவரை மானம்பாக்கி சுவாமிகள் என அழைத்து வந்தார்கள். சுவாமிகள் குகையில் மோனத்தவம் புரிந்த காலங்களில் பசித்தால் அடி வாரத்திலுள்ள கிராமங்களுக்கு வருவார்கள், அத்தகைய கிராமங்களில் கரிகாலியும் ஒன்று. பெருமாள் அம்மையாரின் அடியார் பத்தியால் கவரப்பட்ட நவநாதசித்தர் அடிக்கடி அம்மையாரிடம் வந்து உணவு பெற்றுச் செல்வார்.

சித்தர் அம்மையாரைச் செல்லமாக ‘ஆயா’ என்று அழைப்பார். கோவணத்தோடு மலையிலிருந்து வரும் சித்தர் நேராக அம்மையாரின் வீட்டு முற்றத்திற்குச் சென்று ‘ஆயா’ என்று குரல் கொடுப்பார். அம்மையார் எங்கிருந்தாலும் எத்தொழிலில் ஈடுபட்டிருந்தாலும் ஓடோடியும் வந்து சுவாமிகளுடைய திருப்பாதங்களை விளக்கி பூப்போட்டு வணங்கியபின் தயாராக இருக்கும் உணவினைக் கொண்டு வந்து இருகைகளையும் ஏந்தி நிற்கும் சுவாமிகளின் கைகளில் இடுவார்கள். சுவாமிகள் நின்ற நிலையிலேயே உணவை உண்டு, கையில் நீரூற்ற அதனையும் வாங்கி அருந்தியவுடன் தவத்தை நோக்கிச் சென்று விடுவார்கள்.

அம்மையார் ஒருநாள் சுவாமிகளுக்கு உணவு இடும்போது, “சுவாமி, சிலோனில் நாங்கள் ஒரு சுப்பிரமணியர் கோயில் கட்டுகின்றோம், கெதியில் குடமுழுக்கு நடத்த இருக்கின்றோம், சுவாமிகள் தவறாது அதற்கு வரவேண்டும்” என்று மனம் உருகிக் கேட்டார்கள். சுவாமிகள் புன்முறுவல் பூத்தவராய், “ஆயா நினைச்சா அடிமை வரும்” என்று கூறினார்கள். அம்மையார் குயீன்ஸ்பரி வந்து மாதக் கணக்காகிவிட்டன. கோயில் கட்டும் வேலை முடிவடைந்து குடமுழுக்கிற்கான நாளும் குறித்தாகிவிட்டது. குடமுழுக்கிற்கான ஆயத்தங்கள் எல்லாம் மிக விரைவாக நடைபெற்றுக் கொண்டிருந்தன.

## நவநாத சித்தர் குயீன்ஸ்பரி வருகை - 1901ம் ஆண்டு

குயீன்ஸ்பரி முருகன் கோயிலின் குடமுழுக்கிற்கு முதல் நாள் தான் அம்மையார், தான் சுவாமிகளுக்குச் சொன்னவற்றை நினைவுகூர்ந்தார். மூத்த மகனை அழைத்துத் தான் சுவாமிகளிடம் கூறியதையும் சுவாமிகள் அதற்குக் கொடுத்த விடையையுங் கூறிச் சுவாமிக்கு ஒரு கடிதம் எழுதுமாறு பணித்தார். “இன்று தந்தி அடித்தாலும் சுவாமிகள் வந்து சேர வாரம் ஒன்றாகும், நாளைக்குத் தான் குடமுழுக்கு முடிந்துவிடுமே! இன்று சுவாமிக்கு அறிவித்து என்ன பயன்?” என்று மகனார் கூறவும், “நினைவுக்கு வந்த உடனே அறிவிக்கவேண்டியது எங்கள் கடமை.” என்றார் அம்மையார். அன்றே தபால் எழுதித் தபால் நிலையத்தில் சேர்க்கப்பட்டது. தனது கடமை ஒன்று நிறைவேறி விட்டதாக அம்மையாரின் மனதில் ஒரு நிறைவு. சுவாமிகளின் அருட்சத்தியை நன்கு உணர்ந்தவராகையினால் சுவாமிகள் வரக்கூடும் என்றொரு நம்பிக்கை அம்மையாருக்கு இருந்தது.

மறுநாள் அதிகாலை, வீட்டிலிருந்து குடமுழுக்கிற்கு வேண்டிய பொருட்களுடன் கோயிலுக்கு வந்தார் அம்மையார். அந்த நேரம் சுவாமிகள் எதிரே வந்து கொண்டிருந்தார். அம்மையாருக்கு ஆனந்தம் தாங்கவில்லை. ஓடிச்சென்று சுவாமிகளுடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கி, ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார். சுவாமிகளும் அம்மையாரை ஆசி கூறி எழுந்திருக்கச் செய்தார். “சுவாமி! நேற்றைக்குத்தானே கடிதம் எழுதினேன்! எப்படிச் சுவாமி வந்தீர்கள்!?” என்று அதிசயம் மிகக் கேட்டார் அம்மையார். “ஆயா நினைச்சுது அடிமை வந்திட்டுது” என்று சுவாமிகள் கூறினார்கள்.

நவநாத சித்தருடன் பெரியனைக் குட்டி சித்தர் அவர்களும் இலங்கை வந்ததாக வரலாறு கூறுகிறது. அத்துடன் நவநாத சித்தரின் சீடரான சித்தனைக் குட்டி சித்தர் பின் வருகை தந்ததாக கூறுகிறார்கள்.

கோயிலுக்கு முன்னாக வலது பக்கத்தில் கோணத்திசையாக உள்ள ஒரு இடத்தைச் சுட்டிக்காட்டி, “ஆயா இந்த இடத்தில்தான் அடிமையைச் சமாதி வைக்க வேண்டும்” எனச் சுவாமிகள் கூறினார்கள். அதைப்பற்றி எல்லாம் எதற்காகச் சுவாமிகள் இப்பொழுதே கூறிக் கொண்டிருக்கிறீர்கள்? என்று செல்லமாகக் கடிந்தார் அம்மையார். நாட்கள் சில உருண்டோடின. குயீன்ஸ்பரிக்கு வந்திருக்கும் சாமியாரைப்பற்றித்தான் மலையகமெங்கும் பேச்சு அடிபட்டது. மலையகத்திலுள்ள ஆயிரக்கணக்கான தோட்டங்களிலிருந்தும் பத்தர்கள் சுவாமிகளைத் தரிசிக்க வந்தனர். குயீன்ஸ்பரி ஒரு யாத்திரைத் தலமாக விளங்கியது.

இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் உயர்ந்த உத்தியோகத்தர்கள், ஆன்மீகவாதிகள் வந்து சென்றனர். சுவாமிகளைத் தரிசிக்க இந்தியாவிலிருந்தும் பத்தர்கள் வந்தனர். இந்தியாவிலிருந்து வந்தவர்கள் சுவாமிகளைத் தரிசித்தவுடன், இவர் அந்த ஊரில் சமாதியானவர் இந்த ஊரில் சமாதியானவர் என்று பேசத் தலைப்பட்டனர். சுவாமிகளைத் தரிசிக்க வந்த சேலம்வாசி ஒருவர் ஒருவருடத்திற்கு முன்புதான் இச்சுவாமியைத் தாங்கள் சேலம் பக்கத்தில் சமாதி செய்ததாகத் தெரிவித்தார். அதனைச் சுவாமிகளிடம் விசாரித்தபோது சுவாமிகள் புன்சிரிப்புடன் “இருக்கும் அப்பா” என்றார்.

இலங்கையில் கிட்டத்தட்ட மூன்று முதல் ஆறுமாத காலம் தான் இலங்கையில் இருந்தார். சித்தரின் படம் ஒருவரிடமும் இல்லை. சிறுமி ஒருவர் சித்தரை வரைந்து எடுக்கவேண்டும் என்று செண்பக மரத்தடியில் மயில்கள் சூழ தியானத்தில் இருக்கும் சித்தரை பார்த்து வரைந்த படமே இங்கு இணைக்கப்பட்டுள்ள படமாகும். அவரின் சிலை யாழ்ப்பாணம் கொக்குவில் தென்னாடு சிவமடத்தில் வைக்கப்பட்டுள்ளது.

## நவநாத சித்தரின் சித்துக்கள்

சித்தர்களுக்கு அவர்கள் செயல் எல்லாம் இயற்கை. சாமானியராகிய எங்களுக்கு அவைகள் அற்புதங்கள். தோட்டத் தொழிலாளருடன் சுவாமிகள் இயல்பாகப் பழகினார். தொழிலாளரும் சுவாமிகள்மேல் அன்பும் மரியாதையும் உடையவராகப் பழகினர். பக்கத்தில் உள்ள தோட்டங்கள் தோறும் சுவாமிகள் தாமாகவே உலாவி வருவார். குயீன்ஸ்பரித் தோட்டத் தொழிலாளரிடையே சுவாமிகள் பல சித்துக்கள் விளையாடினார்கள்.

ஒரு நாள் சுவாமிகள் பக்கத்துத் தோட்டத்தில் உள்ள கங்காணியார் ஒருவரைச் சந்திக்கத் தனிமையில் சென்று கொண்டிருந்தார்கள். தேயிலைச் செடி மறைவில் கஞ்சாப் புகை குடிப்பதற்காக மூவர் மறைந்திருந்தனர். சுவாமியைக் கண்டதும், சுவாமி! கஞ்சாப்புகை குடித்து விட்டுத் தான் போகவேண்டும் என்று வற்புறுத்தினர். சுவாமிகள் மறுத்தார். அவர்கள் விடவில்லை. சுவாமியும் இணங்கினார். சுவாமியை வற்புறுத்தியவர்கள் நச்சுத் தன்மையுள்ள சருகுகளும் வைத்து கஞ்சா தயாரித்தனர். கபட நோக்கில் முதலில் சுவாமிகள்தான் குடிக்க வேண்டும் எனக் கூறினர்.

சுவாமி மறுத்து, “நீங்களே முதலில் குடியுங்கள். நீங்கள் குடித்து முடிந்தபின் நான் கடைசியாகக் குடிக்கின்றேன்” என்றார். அவர்கள் சுவாமிகளை விடவில்லை, வற்புறுத்தினார்கள். சுவாமிகள் ஒரு முறை புகையை இழுத்து முன்னாக ஊதினார். மூவர் முகத்திலும் புகை பிடித்த உடனே மயங்கி வீழ்ந்தனர். சுவாமிகள் தாம் செல்லவேண்டிய இடத்திற்குச் சென்றுவிட்டார்கள். புகை குடித்த மூவரையுந்தேடி அந்தந்த வீட்டில் உள்ளவர்கள் தோட்டம் முழுவதும் அலைந்தனர். ஈற்றில் மூவரும் மயங்கிய நிலையில் நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். அங்கும் தெளிவு ஏற்படாமையால் கண்டி வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

சுவாமிகளுடன் இவர்கள் தகாத முறையில் நடந்து கொண்டார்கள் என்ற செய்தி எப்படியோ தெரிந்துவிட்டது. தொழிலாளர் மூவரினதும் உற்றார், உறவினர் சுவாமிகள் இருந்த இடஞ் சென்று, பிழையை மன்னிக்குமாறு கண்ணீர் வர வேண்டினர். சுவாமிகள் தமக்கும் அதற்கும் சம்பந்தம் ஒன்றுமில்லையென அனுப்பிவிட்டார். நான்கு ஐந்து நாட்களாகியும் அவர்கள் மயக்கம் தெளியவில்லை. சுவாமிகளிடம் மீண்டும் சென்று உயிர்ப்பிச்சை இடுமாறு மன்றாடினார்கள், சுவாமிகள் ஒரு சிகறெற் வாங்கிப் பற்றவைத்து ஒரு முறை புகையை இழுத்து ஊதினார். புகை சுழன்று சுழன்று சென்றது. நீங்கள் கவலையில்லாமல் செல்லுங்கள், நோய் சுகமாய்விடும் என்று வந்தவர்களை அனுப்பினார். சுவாமி சிகறெற் புகையை இழுத்து வெளியே ஊதிய அதே நேரத்தில் மூவரும் மயக்கம் தெளிந்து எழுந்தனர்.

இச்செய்தி நிகழ்ந்தபின் தோட்டத் தொழிலாளர் மத்தியிலே சுவாமிமீது பெருமதிப்பும் பயபத்தியும் ஏற்பட்டன. சுவாமிகளைத் தரிசிப்பதற்காக எங்கிருந்து பத்தர்கள் வந்தாலும் தங்குமிட வசதி, சாப்பாட்டு வசதியாவும் கங்காணியார் குடும்பத்தினர், அன்போடு மனப்பூர்வமாகச் செய்து, ஆதரித்து வந்தனர். சுவாமிகளுடைய வருகைக்குப் பின்னர் கங்காணியார் வீடு ஓர் அன்ன சத்திரமாக மாறியதென்றே சொல்லவேண்டும்.

அடியார் ஒருவர் திருவண்ணாமலைக்கு செய்ய அவாக்கொண்டதால் அவரை குகைக்கு வரவழைத்து குகையில் இருந்து திருவண்ணாமலைக்கு ஆகாயவழி சென்று வந்தார். அத்துடன் அடியார் ஒருவரின் வீட்டிற்கு சென்ற இடத்தில் அவர்கள் உணவு கொடுக்கும் போது ஒருகறியை மறைத்து கொடுத்தார்கள். அது மீன் குழம்பு என்பதால் மறைத்தார்கள். சித்தர் அதை கொண்டுவர சொல்ல மீன் கறி கத்தரிக்காய் கறியாக மாறியிருந்தது. அதனை அவர் ஒரு போட்டலம் கட்டி அங்கே அவர்களிடம் கொடுத்து நான் வரும்வரை வைத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னார். அது இன்றும் இருப்பதாக தகவல்கள் உள்ளன.

ஒருநாள் பெருமாள் அம்மையார் சிதம்பரம் செல்ல வேண்டுமென்று சுவாமிகளிடம் உத்தரவு கேட்டார். சுவாமிகள் ஆசியுடன் அனுப்பிவைத்தார்கள். அம்மையார் சிதம்பரம் சென்று ஞானப்பிரகாசத்தில் தீர்த்தம் ஆடி வழிபாடு செய்வதற்காகச் சுவாமிகளால் கொடுக்கப்பெற்ற உருத்திராக்க மாலையைத் தேடினார், காணவில்லை. வீட்டில் மறந்துபோய் வைத்துவிட்டு வந்துவிட்டார். கண்கள் மூடியபடி கைகள் கூப்பிய வண்ணம் நவநாத சித்தரை நினைத்து உருகினார். உருத்திராக்க மாலை கைகளில் விழுந்திருக்கக் கண்டார். நவநாதப் பெருமாள் புறம் புறந்திரிந்து கருணை பாலிப்பதை உணர்ந்து அம்மையார் உள்ளம் நெக்குருகினார்.

சுவாமிகளுடைய மிக நெருங்கிய பத்தர்களுள் திருக்கடம்பத்துறை அன்பர் சி.குருசாமியும் ஒருவர். குருசாமி அவர்களுக்குச் சுவாமிகளுடைய தொடர்பு ஏற்பட்டதன் பின்பு கொல்லிமலைச் சித்தர்களைப் பார்க்கவேண்டும் என்றொரு ஆசை எழுந்தது. அந்த ஆசையைச் சுவாமிகளிடம் கூறினார். அமாவாசைத் தினத்தன்று ஒரு நாள் இரவு 2 மணிக்குக் கொல்லிமலை வருமாறு சுவாமிகள் குருசாமியை அழைத்தார்கள். இந்த அமாவாசை இருட்டில் எப்படிச் செல்வதென்று குருசாமி தயங்கினாராயினும் சுவாமிகள் மீது கொண்ட நம்பிக்கையில் சுவாமியைப் பின்தொடர்ந்தார். குருசாமியின் தயக்கத்தை உணர்ந்த சுவாமிகள் குருசாமியின் வலது கையைத் தமது இடது கையால் பற்றிக்கொண்டு கண்களை இறுக மூடிக்கொள்ளும்படியும் திறக்கச் சொல்லும்போது திறக்கவேண்டும் என்றும் அருளினார்.

2, 3 நிமிடங்களுக்குள் கண்களைத் திறக்கச் சொன்னார் சுவாமி. குருசாமி கண்களைத் திறந்தார். என்ன ஆச்சரியம்! கொல்லிமலை உச்சியில் தாம் இருப்பதை உணர்ந்தார். சுவாமிகள் பெரியதொரு பாறாங்கல்லை இலகுவாகக் கையால் அகற்றி உள்ளே அழைத்துச் சென்றார். ஏழு சித்தர்கள் ஆழ்ந்த சமாதியில் இருப்பதைக் கண்டு தரிசித்தார். சித்தர் ஊரைக்கரை, கோம்பை முதலிய இடங்களில் பத்தர்களின் வழிபாட்டுக்காளானார். அங்குள்ள மக்கள் முழுக்காட்டிப் பூசைகள் செய்தே சித்தரை உபசரித்தார்கள். ஆலயத்துடையான்பட்டி இராமசாமி ரெட்டியார் திருப்பணி செய்துள்ள பெருமாள் கோயில் கிணற்றில் அதிக ஆழத்திற்கு வெட்டியும் நீரின்மையைச் சித்தரிடம் தெரிவிக்க சித்தர் ஒரு சக்கரத்தைத் தகட்டில் வரைந்து கிணற்றில் இடச் செய்தார். இவ்வாறே இராமசாமி இரெட்டியார் செய்யக் கிணற்றில் நிரம்ப நீர் ஊறி வந்தமையை ரெட்டியார் ஒரு விழாவாகக் கொண்டாடினார் சுவாமிகளை வைத்துக்கொண்டே குடமுழுக்கை வெகுவிமரிசையாக நடத்தினார்.

இவ்வாறு எம் சித்தர்களின் சித்தி வல்லமையை கூற வார்த்தைகளே இல்லை. அவர்களை இனங்கண்டு கொள்வதும், காண்பதும், அவர்களுடைய அருளாசிகளைப் பெறுவதும், பல பிறப்புக்களிலும் நாம் செய்த புண்ணியத்தின் பயனே ஆகும். அப்பெருமானின் அருளாசி அனைவருக்கும் கிட்ட வேண்டும் என்று அவருடைய திருவடிகளில் வணங்கி நிற்கின்றேன்.

திருச்சிற்றம்பலம்

தொகுப்பு - சிவத்திரு.வடிவேலு கங்காளன்
தகவல்கள், படங்கள்: சிவத்திரு.யோகி. தங்கவேல் கோபிநாத்

# திருமுறையே சைவநெறிக் கருவூலம் செந்தமிழ் வேதம்
# அனைத்துக் கோயில்களிலும் அவை ஒலிக்கவேண்டும்

## ஓதுவார் பண்பாடு மீண்டும் புத்துயிர் பெறவேண்டும், வாழையடி வாழையாக அவர்கள் வளரவேண்டும்.

**“அர்ச்சனை பாட்டேயாகும் ஆதலால்**
**மண் மேல் நம்மைச்**
**சொற்றமிழ் பாடுக என்றார்**
**தூமறை பாடும் வாயார்”**

இது தெய்வச் சேக்கிழாரின் பெரியபுராணத்தில் குறிப்பிடப்பட்ட வார்த்தைகள். **“அர்ச்சனை என்பது பாட்டே ஆகும் ஆதலினால் நீ சொற்றமிழால் என்னை நோக்கி பாடு”** என்று சுந்தரை நோக்கி ஈசன் பணிக்கும் காட்சியே இது. ஈசனிடம் அருள் பெற்ற தமிழ்ஞான சம்பந்தர் **“தோடுடைய செவியன், தூவெண் மதி சூடியோன், காடுடைய சுடலைப்பொடி பூசியோன்”** என்று தன் மழலைத்தமிழால் பாடிப்போகின்றார். ஆற்றாத வலியினால் அழுது புலம்பியவர், **“கூற்றாயினவாறு”** என்று தமிழெடுத்து ஒரு புரட்சியே செய்து முடித்தார்.




இவ்வளவு ஏன் வார்த்தைகளில் கண்ணீர்த்துளிகள் சிதறும் மாணிக்க வாசகனின் தமிழுக்காய் தென்னாட்டு ஈசன் மதுரை மண் மீது இறங்கி மாணிக்க வாசகர் உதிர்த்த ஒவ்வொரு வார்த்தைகளையும் தன் கைகளால் எழுதி வாதவூரன் சொல்ல அழகிய சிற்றம்பலமுடையான் எழுதியது என்று தமிழில் கையெழுத்து இட்டு மறைந்தான். கணவனைப் பிரிந்த பின்னும் கைம்பெண்ணாய் அடையாது ஓங்கிய காரைக்கால் அம்மையின் தமிழுக்காய் அவளை அம்மா என்று அழைத்தான்.

இலங்கையை ஆண்ட வேந்தன் இராவணன் மனைவியின் தமிழில் தன்னைத் தொலைத்து இருவருக்கும் மழலையாய் வந்து அருளினான் சிவபெருமான். சைவத்தமிழ் நாயன்மார்களின் வரலாற்றை நூலாக்க சேக்கிழார் வழி தெரியாது தொலைத்த போது **“உலகெலாம்”** என்று அடியெடுத்துக் கொடுத்தான். புறநானூற்றிலும் பழம்பாடல்களிலும் வீரத்திற்கு உவமையாய் திகழ்ந்தான். தமிழின் தொன்மை அறியாது கலங்கிய போது சிந்து வெளியில் தமிழி தாங்கி கந்தழிச்சிவலிங்கமாய் மண்ணில் உறைந்தான். நக்கீரன் தமிழுரைக்க நெற்றிக்கண்ணில் வாதம் சொன்னான். சொக்கநாதனாய் மதுரை மண்ணை முன்னம் காத்து நின்றான். சாதியை எதிர்த்துக் கிளர்ந்த சைவசித்தாந்த நூல்களின் பொருளாக நின்றான்.

பாரிடை ஐந்தாயும், நீரிடை நான்காயும், தீயிடை மூன்றாயும், வளியிடை இரண்டாயும், வெளியிடை ஒன்றாயும் எங்கும் வியாபித்து நீக்கமற நிலைத்திருப்பவனே இறைவன். திருமூலர்

**“காலினுள் ஊறும் கரும்பினில் கட்டியும்**
**பாலினுள் நெய்யும் பழத்துள் இரதமும்**
**பூவினுள் நாற்றமும் போல் உளன் எம் இறை**
**காவலன் எங்கும் கலந்து நின்றானே.”**

என்று அவனைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். அத்தகு பரந்த பொருளான ஈசனை அடைந்த அறுபத்து மூவர் வரலாற்றில் புலையர், வண்ணார், அந்தணர், அமைச்சர் என எந்தவித குல, சாதி, கோத்திர வேற்றுமை இன்றி அனைத்து வகையானவர்களும் அவன் மீதுற்ற காதலால் அறுபத்து மூன்று மெய்யடியர்களாகி உமைபங்கனின் உவப்பிலா திருவடிப்பேறு பெற்று சமத்துவமடைந்துள்ளனர். **“சாத்திரம் பல பேசும் சழக்கர்காள் கோத்திரம் குலம் கொண்டு என்செய்வீர்”** என்று சாதியம் பேசும் அடக்குமுறையை தன் கொழுந்தமிழால் எரித்தான் நாவுக்கரசன். ஆண் என்ன பெண் என்ன **“பெண்மையனே தொன்மை ஆண்மையனே அலிப்பெற்றியனே”** என்று மூன்றாம்பால் வரை தமிழால் சமத்துவம் பேசிப்போகின்றார் மாணிக்கவாசகர்.

**“ஒன்றே குலம் ஒருவனே தேவன்”** என்று உரத்து முழக்கமிட்ட திருமூலன், **“இறைவன் என்னை நன்றாகப் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே”** என்றும் முழங்கிப் போகின்றான். இது தான் சைவத்தமிழ். சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்த போது காதல் பெரும்பாடு பொருளாக இருந்தது. பாடியவர் புலவர் என்றும் அதை மக்களிடம் கொண்டு சேர்த்தவர்கள் பாணர்கள் என்றும் அறியபெற்றனர். அதே நிலையில் இயக்கப்புரட்சி செய்து சைவத்தைக் காத்தபோது புலவர்கள் அருளாளர் ஆயினர். பாடகர்களும் பாணர்களும் ஓதுவார்களாகவும் இசையாளராகவும் உருவெடுத்தனர்.

அவ்விதம் அடியவர்கள் புரிந்த தொண்டுகளில் தனிச்சிறப்பு மிக்கது பாடும் பணியே ஆகும். கல்லையும் கரைந்துருகச்செய்யும் இசை கங்கை தொங்கு சடையானை உருகச்செய்யாதோ? சாமகானத்திற்கு உருகிப்போய் இலங்கை அரசனுக்கு அருள் செய்த சடாமகுடன் தம்மடியார் பாடுவதற்கன்றோ பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படியும் பட்டு பல துன்பமடைந்தார். வாதவூர் அடிகள் அக்காட்சியை

**“பண் சுமந்த பாடற்பரிசு படைத்தருளும்**
**பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்**
**விண் சுமந்த கீர்த்தி வியன் மண்டலத்து ஈசன்**
**கண் சுமந்த நெற்றிக்கடவுள் கலி மதுரை**
**மண் சுமந்து கூலி கொண்டு அக்கோவால் மொத்துண்டு**
**புண் சுமந்த பொன்மேனி பாடுதும் காண் அம்மானாய்”**

என சொல்லோவியமாய் தீட்டியுள்ளார். ஆழ்ந்து பாருங்கள், மாணிக்க வாசகனின் தேன்தமிழைப் பருகுவதற்காக பாடல்களுக்கு உரிய பரிசிலை வழங்கும் அந்த ஈசன், மண் மீது இறங்கி மதுரையின் மண்ணை கூலிக்காய் சுமந்து அதனால் பாண்டிய மன்னனால் அடியும் பெற்று மேனி புண்ணானான் என்று மாணிக்க வாசகர் அழுது உரைக்கின்றார்.

அவ்விதம் மாதொருபங்கன்பால் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதும் ஓதுவார்கள் சிறப்புடையவர்கள். இவர்கள் பொன்பொருள் முதலியவற்றை விட ஈசன் அருளையே பெறவிளைவார்கள். திருக்கூட்டச்சிறப்பும் அவ்விதம் அவர்கள் வீடுபேறும் வேண்டாமென்று ஒதுக்கி கொன்றை சூடியோனை கைதொழுது பாடுவதையே விரும்புவார்கள் என்பதை பின்வருமாறு இயம்பியுள்ளது.

**“பூத மைந்தும் நிலையிற் கலங்கினும்**
**மாதொர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார்**
**ஓது காத லுறைப்பி னெறிநின்றார்**
**கோதி லாத குணப்பெருங் குன்றனார் .”**

தூக்கிய திருவடிகளுடன் நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதன் தன் வீசிய பொற்கரங்களில் எழுத்தாணி ஏந்தி இருமுறை அடியவரின் நன்மைக்காய் ஓலை எழுதியுள்ளான். பாணபத்திரரின் வறுமை அகல கழற்றறிவாரிடம் அவ்வோலையை கொடுத்து வேண்டியதைப் பெறும் படி, பாணாபாத்திரனுக்கு ஓலை கொடுத்தனுப்பினார். இறைவனே ஓலைகொடுத்து பொருள் பெற கழற்றறிவாரிடம் ஆற்றுப்படுத்தியதால், அக்கருவூலத்துடன் ஆட்சியையும் பாணபத்திரருக்கு நல்க முன்வர, பாணபத்திரர் அவ் ஓலையின் இறுதி அடிகள் **“மாண் பொருள் கொடுத்து வர விடுப்பது”** என்றுள்ளமையால் வறுமை நீங்க தேவையான பொன்னை மட்டும் பெற்றார். ஆக இறைவன் பொன்னை வாங்கி விட்டு அவரைப்பாடும் பணி செய்ய பணித்தமை மூலம் ஓதுவார் பணியின் மகத்துவத்தை நாம் அறிய முடிகின்றது.

**“தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்”** என்று நாவுக்கரசர் சொல்லிப்போனார். **“சொல்லுவார் பொருள் உணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்”** என்று இயம்பிப்போனாரே மாணிக்கவாசகர். அந்தத்தமிழும் செழுஞ்சைவமும் தமிழோதும் ஓதுவார் முறையும் ஒலிக்கும் இசைக்கருவிகளும் எங்கே இப்பொழுது என்றால் கவலையான பதில் தான் விரிகின்றது. தெய்வத்தமிழ் துர்மொழியாக்கப்பட்டது. சைவநெறி வெறும் சாப்பாடாக மாற்றப்பட்டது. ஓதுவார்கள் மரணச்சடங்கு செய்பவர் என்று மாற்றப்பட்டு விட்டார்கள். **“நாதம் பறையினன்”** என்று மாணிக்க வாசகன் புகழ்ந்த பறை, உடுக்கு, யாழ், முழவு, கொம்பு, சங்கு போன்ற எத்தனை எத்தனையோ இசைக்கருவிகள் இல்லாமல் ஆக்கப்பட்டும் தாழ்த்தப்பட்டும் போய் விட்டன. இவை எல்லாம் சைவத்திலும் தமிழிலும் படிந்த சாபங்கள் என்றே சொல்லலாம்.

தமிழகத்திலும் ஈழத்திலும் சமகாலத்திலே ஆலயங்களில் திருமுறை ஓதும் ஓதுவார்களின் எண்ணிக்கை அருகியே வருகின்றது. ஓதுவார்களுக்கு போதிய பொருளாதாரமும் மரியாதையும் வழங்கப்படாமையே இதற்கு பிரதான காரணம். சில திருவாசகப்பாடல்களும் பல ஓதுவார்களும் மரணச்சடங்கிற்கு என்றே இன்று எழுதாத சட்டமாக மட்டுப்படுத்தப்பட்டு விட்டனர். எப்படி இருப்பினும் ஓதுவார்கள் எத்தனை துன்பம் துயரம் தடைகள் வரினும் தம்மை வாழ்வில் பிரகாசிக்க செய்வது திருமுறைகள் என்று தவறாமல் ஓதி வருகின்றார்கள். இங்கு நம்பியாரூரரின் பாடல் சிந்தனைக்கு உரியது.

**“மீளா அடிமை உமக்கே ஆளாய்ப்**
**பிறரை வேண்டாதே**
**மூளாத் தீப்போல் உள்ளே கனன்று**
**முகத்தால் மிகவாடி**
**ஆளாய் இருக்கும் அடியார் தங்கள்**
**அல்லல் சொன்னக்கால்**
**வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர்**
**வாழ்ந்து போதீரே”**

சோழர் காலத்தில் இராசராச சோழன் திருமுறைகளை தொகுப்பித்து பெரும்பணியாற்றியதோடு மட்டுமன்றி வருங்காலங்களிலும் மெய்நெறியாம் சைவம் தழைக்க ஓதுவார்களை நியமித்து பணியாற்றி உள்ளான். அதற்கு சான்றாக தஞ்சைப் பெருங்கோயில், திருமுறை விண்ணப்பத்திற்கு 48 ஓதுவார்களையும் மத்தளம் வாசிக்க ஒருவரையும் உடுக்கு இசைக்க ஒருவரையும் நியமித்ததாக கல்வெட்டு குறிப்பிடுகின்றமையானது ஓதுவார்களின் முக்கியத்துவத்தினை பறை சாற்றுகின்றது. எப்படி இருந்த தமிழ் ஓதுவார்கள் இன்று எப்படி இருக்கின்றார்கள் என்ற கேள்வி கண்ணீர்த்துளிகளை மட்டும் தான் வரவழைத்துப் போகின்றது.

பாடல் பெற்ற கோயில்கள் பல இருந்தும் அவற்றை காக்கும் ஓதுவார்கள் வெகு குறைவாக அருகிவிட்டனர். என்ன செய்வது என்ற கவலையை தவிர வேறு ஏதும் மிச்சமில்லை. ஓதுவார்களை இந்த சமூகம் பார்க்கும் விதமே மிகுந்த கவலையை தான் ஏற்படுத்துகின்றது. ஆலயத்திற்கு வெளியேயாவது எம் தமிழ் வாழும் என்றால், இசைக்கச்சேரிகளின் இடத்தை சினிமாப்பாடல்கள் வலிந்து கைப்பற்றி வாழ்கின்றன. தன் தமிழைக் கேட்க அவன்



கண்ணைத் திறந்து மண்மீது இறங்கினால் தான் உண்டே தவிர அல்லாவிடின் இதுவும் கடந்து போகும் என்று எம்மை நாமே தேற்றிக்கொண்டு செல்ல வேண்டியது தான்.

இந்த நிலையிலும் ஓதுவார் தம் பெருமைகளையும், திருமுறையை மீட்டு எடுத்து வெளி உலகிற்கு ஆவணப்படுத்திய இராசாராசன் பெருமையையும் பறை சாற்றி ஓதுவார் மூர்த்திகளை சிறப்பிக்கும் முகமாகவும், உலகமுய்ய திருமுறை அருளிய மெய்யடியார்களின் திருமுறைகளை ஓதிடும் முகமாகவும், தீநுண்மிப்பரவலில் இருந்து உலகை காத்து அருளும் விதமாகவும் அண்மையில் அரன்பணி அறக்கட்டளையினரால் தமிழ் நாட்டில் திருமுறை விண்ணப்ப நிகழ்வானது, தமிழக ஓதுவார்கள் அனைவரும் இணைந்து சங்கமித்திடும் வகையில் அரியவிழாவாக சிவனருளால் சிறப்புற நடைபெற்றது. இதன் போது திருமுறைகளின் பெருமை தொடர்பாகவும் அவற்றை அடுத்த தலைமுறைக்கு வழங்க வேண்டிய தேவை தொடர்பாகவும், இராசராசனின் கல்லறை உருவாக்கப்படவேண்டிய தேவை தொடர்பாகவும் இராசராசனுக்கு தஞ்சைப் பெரியகோயிலின் சிற்றுருவாக்கவடிவில் கற்றளி அமைப்பதன் நோக்கத்தினையும் அரன்பணி அறக்கட்டளை செயலர் சிவத்திரு.பவானி தியாகராசர் ஐயா விளக்கினார். விழிப்புணர்வுகளின் மூலமாகவேனும் அல்லது விழாக்களின் மூலமாகவேனும் சைவத்தமிழையும் அதன் ஓதுவார் பண்பாட்டையும் காப்பது ஒவ்வொரு இறுதி சைவத்தமிழனதும் கடமையாகும்.

திருச்சிற்றம்பலம்

ஆலவாய் அமுதன், யாழவன் சிவவேதன்
தென்னாடு சிவமடம் - யாழ்ப்பாணம்

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம் -

# அருள்மிகு சிவகாமசுந்தரி அம்மன் உடனுறை திருமூலநாதர் திருக்கோயில் தில்லை (சிதம்பரம்)



சிவத்திரு
குமரேசன்
இராஜசிம்மன்

## தேவாரப் பாடல் பெற்ற சிவபுரங்களில் 1 வது திருக்கோயில்

(சென்ற திங்கள் தொடர்ச்சி)

இந்த நடராசர் கோயில் அமைந்துள்ள இடமானது உலகின் பூமத்திய இரேகையின் மையைப் பகுதி என்று சொல்லப்படுகிறது. உலக காந்த ஈர்ப்பு விசையின் மையத்தில் தான் இந்த சிதம்பரம் நடராசர் கோயில் அமைத்திருக்கிறது.

**அமைவிடம்: (கடலூர் மாவட்டம் - தமிழ்நாடு)**

கடலூர் மாவட்டம் - சென்னையில் இருந்து புகையிரதம் மற்றும் சாலை மார்க்கமாக சிதம்பரம் சென்று அடையலாம். சென்னையில் இருந்து சுமார் 240 கி.மி. தொலைவில் சிதம்பரம் இருக்கிறது. காவிரியின் வடகரை சிவத்தலங்களை தரிசிக்க, சிதம்பரத்தை ஒரு நுழைவாயில் என்று கூட சொல்லலாம்.

### ஆனந்த தாண்டவம்

ஆடல் கடவுள் என்று அழைக்கப்படும் நடராசர் ஒரே இடத்தில் இல்லாமல் ஆடிக்கொண்டே இருக்கிறார்.

(அ) வலது புற மேல் கையில் உடுக்கையை கொண்டிருப்பது, இந்த உலகம் ஒலியின் மூலம் துவங்கியது என்பதைக் குறிப்பதாக நம்பப்படுகிறது.

(ஆ) இடது புற மேல் கையில் உள்ள நெருப்பு எந்நேரமும் அழிந்துவிடும் என்ற எச்சரிக்கையை கொடுக்கின்றது.

(இ) வலது புற கீழ் கையில் காப்பாற்றுவதை குறிப்பதைபோன்று, பயப்படாதே நான் இருக்கிறேன் என்று கூறுகின்றது.

(ஈ) இடது புற கீழ் கையால், உயர்த்தி இருக்கும் காலைக் காட்டி, தன்னிடம் அடைக்கலம் புகுவோருக்கும், தன்னை வணங்கும் பத்தர்களுக்கான இடம் என்பதை உணர்த்துகிறது. இந்த நடனத்தில் ஆக்கல், அழித்தல், காத்தல் என்ற அணுவின் இயற்பியல் விதியின் அனைத்து செயல்களோடும் ஒத்துப்போகின்றது.

உலகின் பெரிய அணு ஆராய்ச்சி அமைப்பான Geneva வில் உள்ள CERN (European Organization for Nuclear Research, the biggest particle physics laboratory in theworld) என்ற இடத்தில், இந்த நடராசர் சிலை வைக்கப்பட்டுள்ளது.

### கோயில் புராணக்கதைகளும் வழிபாடுகளும்

முற்காலத்தில் தில்லை மரங்கள் இங்கு அதிகம் இருந்ததால், இது தில்லைவனம் என அழைக்கப்பட்டது. இங்கு சிவபெருமான், நவீன இயற்பியல் அறிஞர்கள் மற்றும் அணு விஞ்ஞானிகள் கூறும் **'பிரபஞ்ச நடனம்'** ஆடும் நடராசராக காட்சியளிக்கிறார். இவர் காலின் கட்டை விரலுக்கு அடியில் தான் பூமியின் மையப்புள்ளி இருப்பதாக அறிவியலாளர்கள் கூறுகின்றனர். நாட்டியம் ஆடும் இந்த சிவபெருமானை **'ஆடற்கூத்தன்'** எனவும் அழைக்கின்றனர். இக்கோயில் தமிழ்நாடு மற்றும் இந்தியா வின் மிகப்பெரிய பரப்பளவு கொண்ட கோயில்களில் ஒன்று.

புத்த மதத்தை தழுவிய மன்னன் அசோகன் தன் படை ஒன்றை அனுப்பி, சிதம்பரம் கோயிலை புத்த விகாரமாக மாற்ற முயன்றான். அவர்களை மாணிக்கவாசகர் தன் திறமையால் ஊமையாக்கி சிதம்பரத்தை காப்பாற்றினார். ஒரு தடவை இத்தலத்தில் கொடியேற்றம் நடந்த போது கொடி ஏறாமல் தடைபட்டது. அப்போது உமாபதி சிவாச்சாரியார் என்பவர் கொடிக்கவி என்ற பாடலை பாடினார், அடுத்த நிமிடம் கொடி மரத்தில் தானாகவே ஏறிய அற்புதம் நடந்தது. திருப்பல்லாண்டு பாடிச் சேந்தனார் தடைப்பட்ட தேரை ஓடச் செய்த மந்திரத் தலமும் இதுவேயாகும்.

தேவநாயனார் என்பவர் நடராசர் மீது ஒரு சித்தாந்த பாடலைப் பாடி கருவறை முன்புள்ள வெள்ளிப்படிகளில் நூலை வைத்தார். அப்போது படியில் உள்ள ஒரு யானை சிற்பம் உயிர் பெற்று, அந்த நூலை எடுத்து நடராசரின் காலடியில் வைத்தது. இந்த அதிசயம் காரணமாக அந்த நூலுக்கு 'திருக்களிற்றுப்படியார்' என்ற பெயர் ஏற்பட்டது. முத்து தாண்டவர் என்ற புலவர் தினமும் சிதம்பரம் கோயிலுக்குள் நுழைந்ததும், முதலில் தன் காதில் எந்த சொல் விழுகிறதோ, அதை வைத்து கீர்த்தனை இயற்றி, பாடி நடராசரை துதித்து வழிப்பட்டார். அவர் பாடி முடித்ததும் தினமும் அவருக்கு நடராசர் படிக்காசு கொடுத்தது ஆச்சரியமானது.

சிதம்பரம் கோயிலுக்குள் திருமுறைகள் உள்ளது என்பதை, இந்த உலகுக்கு சொன்னவர் பொல்லாப் பிள்ளையார் ஆவார். எனவே விநாயகரை மூத்த நாயனார் **(திருமுறைகளை சொன்ன பிள்ளையார்)** என்று அழைக்கின்றனர். சிதம்பரம் என்றாலே அனைவரின் நினைவிற்கு வருவது **'சிதம்பர இரகசியம்'** என்ற சொல்வழக்காகும். **இதன் உண்மையான பொருள் 'சித்' எனும் அறிவு 'அம்பரம்' எனும் வெட்டவெளியில் கலக்கும் போது நாம் ஒன்றுமில்லாதவர்கள் எனும் வாழ்க்கை தத்துவத்தை விளக்குவது தான் சிதம்பர ரகசியமாகும்.** அதனால் தான் இக்கோயிலில் மூலவர் திருமுன்னில் வெட்டவெளியை திரையிட்டு மறைத்து, அதற்கு தீபாராதனை காட்டப்பட்டு, பிறகு திரையை விலக்கி சூனிய தத்துவத்தை பத்தர்களுக்கு காண்பிக்கின்றனர்.

### திருக்கோயில் பூசைகளும் மகிமைகளும்

திருவாரூரில் பிறந்தால் முத்தி, காஞ்சியில் வாழ்ந்தால் முத்தி, காசியில் இறந்தால் முத்தி, உத்தரகோசமங்கை மண்ணை மிதித்தால் முத்தி, திருவண்ணாமலையை நினைத்தால் முத்தி, **"உயிர் போகும் நேரத்தில் நினைக்க அருள்புரிவாய் அருணாச்சலா"** என அப்பர் கூறியுள்ளார். இதுபோல், வாழ்நாளில் ஒரு தடவையேனும் நடராசரையும், திருமூலநாதரையும் தரிசித்தால் முத்தி கிடைத்து விடும். இத்தலத்து நடராசரைக் காண உலகமே திரண்டு வருகிறது. ஏராளமான வெளிநாட்டவர்கள் கூட நடராசரின் சிற்பச் சிறப்பைக் காண வருகின்றனர். அப்படிப்பட்ட



அருமையான சிலையை, திருவிழா காலத்தில் தேரில் எடுத்து வருகிறார்கள்.

ஒருமுறை நான்முகன், யாகம் ஒன்றை நடத்தினார். இதற்காக, தில்லைவாழ் அந்தணர் மூவாயிரம் பேரையும் சத்தியஉலகுக்கு அழைத்தார். தில்லையிலேயே இருந்து, நடராசரின் திருநடனத்தைக் காண்பதை விட அந்த யாகத்தில் எங்களுக்கு என்ன பலன் கிடைத்து விடப்போகிறது எனக் கூறினர் தில்லைவாழ் அந்தணர். அப்போது, நடராசர் யாகத்திற்கு செல்லும்படியும், யாகத்தின் முடிவில் அங்கேயே தோன்றுவதாகவும் வாக்களித்தார். அவ்வாறு தோன்றிய கோலத்தை **'இரத்னசபாபதி'** என்கின்றனர். இவரது சிலை நடராசர் சிலையின் கீழே உள்ளது. இவருக்கு தினமும் காலையில் பத்து மணிக்குள் பூசை நடக்கும். சிலையின் முன்புறமும், பின்புறமுமாக இந்த தீபாராதனையைச் செய்வர்.

மார்கழி மாதங்களில் **'திருவெம்பாவை'** பாடப்பட்டு சிவனுக்கு விசேட வழிபாடுகள் நடக்கின்றன. அம்மாதத்தில் வரும் திருவாதிரை தினம் வெகு சிறப்பாக, இங்கு கொண்டாடப்படுகிறது. ஆனித்திருமஞ்சனம், மகாசிவராத்திரி போன்ற விசேட தினங்களில் சிவபெருமானுக்கு சிறப்பு பூசைகள் நடைபெறுகின்றன. சிதம்பர நடராசரை வழிபட்டால் முத்தி உறுதி என்பது, சிவனடியார்களின் கருத்தாகும். மேலும் மனதில் எத்தகைய கோரிக்கைகள் மற்றும் வேண்டுதல்களோடு இங்கு வந்து, சிவபெருமானை மனமுருகி வழிபடுவதால், அவை நிச்சயம் நிறைவேறும் என கூறுகிறார்கள். நாட்டிய கலையில் சாதிக்க விரும்புபவர்கள் அதிகம் வந்து வழிபடும் கோயிலாக சிதம்பரம் நடராசர் கோயில்இருக்கிறது.

சிதம்பரம் நடராசருக்கு தினந்தோறும் ஆறு காலப் பூசைகள் நடைபெறுகின்றன. வருடத்திற்கு ஆறு திருமஞ்சனங்கள், இந்து தொன்மவியல் கணக்கின் படி மனிதர்களது ஓர் வருடம் என்பது தேவர்களுக்கு ஒரு நாளாகும். ஒரு நாளில் ஆறு கால பூசைகள் நடைபெறுவது போல தேவர்கள் செய்யும் பூசையாக வருடத்திற்கு ஆறு திருமஞ்சன பூசைகள் சிதம்பரம் கோயிலில் நடைபெறுகின்றன.

நடனக்கலைகளின் தந்தையான சிவபெருமானின் நடனமாடும் தோற்றம், நடனராசன் எனப்படுகிறது. இது மருவி நடராசன் எனவும் அழைக்கப்படுகிறது. சிவபெருமானின் பலவகையான நடனங்களில், இத்தலத்தில் ஆனந்த தாண்டவம் நிகழ்கின்றது. சிதம்பரம் கோயிலில், **'நாட்டியாஞ்சலி'** என்ற நாட்டிய விழா ஒவ்வொரு வருடமும் நடைபெறுகிறது. இங்கு உலகில் பல்வேறு இடங்களில் நாட்டியம் பயிலும் கலைஞர்கள், தங்களுடைய நாட்டியத்தை அர்ப்பணமாக வழங்குகின்றனர். கலைஞர்கள் இங்கு வந்து நாட்டியார்ப்பணம் செய்வதை ஒரு பெருமையாக கருதுகின்றனர்.

தமிழகத்திலுள்ள கோயில்களில் அதிகமான நூல்களினாலும், பாடல்களினாலும் போற்றப்படுகின்ற கோயிலாக சிதம்பரம் நடராசர் கோயில் உள்ளது. இத்தலத்தினைப் பற்றி, தேவாரம் - 11 திருப்பதிகங்கள், திருவாசகம் - 25 திருப்பதிகங்கள், திருக்கோவையார், திருமுறைக் கண்ட புராணம், திருவிசைப்பா, திருபல்லாண்டு, திருமந்திரம், கோயில் நான்மணிமாலை, கோயில் திருப்பண்ணியர் விருத்தம், பெரியபுராணம், சிதம்பரம் மணிக்கோவை போன்ற நாற்பத்து மூன்று நூல்கள் பாடப்பட்டுள்ளன.

### திருக்கோயில் அமைப்பு

நாற்பது ஏக்கர் பரப்பளவில், நான்கு திசைக்கென ஒரு கோபுரமாக நான்கு கோபுரங்களும், ஐந்து சபைகளும் உடையது இக்கோயில். இவ்வாலயத்தில் உள்ள கிழக்கு கோபுரத்தில் நூற்றியெட்டு பரதநாட்டிய நிலைகளில் உள்ள சிற்பங்களை காணலாம். மேலும் இங்கு மூலவர் சிலை இருக்கும் இடம் கனக சபை என்று அழைக்கப்படுகிறது. இந்த சபை, பராந்தக சோழ மன்னனால் பொற்கூரை வேயப்பட்டது. அதனால் இந்தச் சபை பொன்னம்பலம் எனவும் அழைக்கப்படுகிறது.

சிற்சபை (சிற்றம்பலம்) நடராசப் பெருமான் திருநடனம் புரிந்தருளும் இடமாகும். முதலாம் ஆதித்த சோழனுடைய மகன் முதல் பராந்தக சோழன் இச்சிற்றம்பலத்திற்கு பொன் வேய்ந்தான் என்று, திருவாலங்காட்டுச் செப்பேடுகளும், **'லெய்டன்'** நகரப் பெரிய செப்பேடுகளும் கூறுகின்றன. கனகசபை (பொன்னம்பலம்) சிற்றம்பலத்திற்கு முன் அமைந்துள்ளது. இங்கு படிக இலிங்கத்திற்கு நாள்தோறும் ஆறு கால பூசை நடைபெறுகிறது. இப்பொன்னம்பலத்தின் முகட்டை, முதலாம் ஆதித்த சோழன் தான், கொங்கு நாட்டிலிருந்து கொண்டு வந்து, உயர்ந்த மாற்றுடைய பொன்னால் வேய்ந்தான் என்று தெய்வச் சேக்கிழார் **'இடங்கழி நாயனார்'** வரலாற்றில் கூறுகின்றார். தில்லைக் கோயில் கல்வெட்டுப்பாடலொன்றில், சிறந்த சிவபத்தனும், படைத்தலைவனுமான, மணவில் கூத்தனான காளிங்கராயன் என்பவன் இப்பொன்னம்பலத்தைப் பொன்னால் வேய்ந்தான் என்றும் கூறப்படுகின்றது.

இராசசபை என்பது ஆயிரங்கால் மண்டபம். ஆண்டு தோறும் ஆனி, மார்கழி மாதங்களில் நடைபெறும் ஒன்பதாம் நாள் திருவிழாக்களில் நடராசப் பெருமான் இரவில் இம்மண்டபத்தில் எழுந்தருளி மறுநாள் காலை பத்தர்களுக்கு தரிசனம் தருவார். சேக்கிழார், இங்குள்ள ஆயிரங்கால் மண்டபத்தில் தான் பெரியபுராணம் பாடி அரங்கேற்றினார். தேவசபை, பேரம்பலம் என்று அழைக்கப்படுகிறது. இதன் விமானம் செம்பினால் செய்யப்பட்டுள்ளது. நிருத்தசபை நடராசப் பெருமானின் கொடிமரத்திற்குத் தென்புறம் மிகவும் அற்புதமான வேலைப்பாடுகளுடன் அமைந்துள்ளது. ஊர்த்துவ பெருமானின் திருமேனி இங்கு உள்ளது.

கோயிலில் சிவகங்கை தீர்த்தக் குளத்துடன், பரமானந்த கூபம் (நடராசர் கோயிலின் கிழக்கில் அமைந்துள்ளது), வியாக்கிரபாத தீர்த்தம் (நடராசர் கோயிலுக்கு மேற்கில் இளமையாக்கினார் கோயிலிக்கு எதிரே அமைந்துள்ளது), அனந்த தீர்த்தம் (நடராசர் கோயிலுக்கு மேற்கிலுள்ள திருவனந்தேச்சுரத்துக்கு கோயிலில் அமைந்துள்ளது), நாகச்சேரி (அனந்தேச்சுரத்துக்கு மேற்கில் அமைந்துள்ளது), பிரம தீர்த்தம் (நடராசர் கோயிலுக்கு வடமேற்கே இருக்கும் திருக்களாஞ்சேரியில் கோயிலில் அமைந்துள்ளது), சிவப்பிரியை (நடராசர் கோயிலுக்கு வடக்கே உள்ள பிரமசாமுண்டி கோயிலின் முன் அமைந்துள்ளது), புலிமேடு (சிதம்பரம் கோயிலின் தென் பகுதியில் அமைந்துள்ளது), குய்ய தீர்த்தம் (நடராசர் கோயிலின் வடகிழக்கே கிள்ளைக்கு அருகே அமைந்துள்ளது), திருப்பாற்கடல் (சிவப்பிரியைக்கு தென்கிழக்கில் அமைந்துள்ளது) ஆகிய தீர்த்தங்களும் அமைந்துள்ளன.

சித்தர்கள் கண்டுபிடித்த மனித உடலின் தத்துவத்தின் படி இக்கோயில் கட்டப்பட்டுள்ளது. இக்கோயிலில் இருக்கும் 21,600 தங்க ஓடுகள் ஒரு நாளில் மனிதன் சுவாசிக்கும் மூச்சின் சரியான எண்ணிக்கையாகும். அக்கூரையில் அடிக்கப்பட்டிருக்கும் 72,000 ஆணிகள் மனித உடலில் ஓடும் 72,000 நாடி, நரம்புகளை குறிப்பதாகும். இக்கோயிலில் இருக்கும் 9 வாயில்கள் மனித உடலில் இருக்கும் 9 துவாரங்களை குறிக்கிறது. **"சிவாயநம"** எனும் 5 எழுத்துக்களை குறிக்கும், பொன்னம்பலத்தின் 5 படிகள், 64 கலைகளை குறிக்கும் 64 சாத்துமரங்கள், 96 தத்துவங்களை குறிக்கும்

96 சாளரங்கள் (சன்னல்கள்), நால்வேதங்கள், ஆறு சாத்திரங்கள், ஐம்பூதங்களை குறிக்கும் வகையில் இக்கோயிலின் தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இறைவன் இத்தலத்தில், நடராசர் என்ற உருவமாகவும், ஆகாயம் என்ற அருவமாகவும், படிக லிங்கம் என்ற அருவுருமாகவும் அருள்பாலிக்கிறார். முக்குறுணி விநாயகர், திருமுறை காட்டிய விநாயகர், பொல்லாப் பிள்ளையார், வல்லப கணபதி, மோகன கணபதி, கற்பக விநாயகர், நர்த்தன விநாயகர், திருமூல விநாயகர் என பல்வேறு விநாயகர் திருமுன்கள் இக்கோயிலில் அமைந்துள்ளன. சிதம்பரம் கோயிலுக்குள் திருமுறைகள் இருப்பதை, இங்குள்ள பொல்லாப் பிள்ளையாரே கூறினார் என்ற சொல் உள்ளது.

சிதம்பரம், ஒன்பான் கோள்களால் (நவகிரகங்களால் வழிபடப்பட்ட இலிங்கங்களை உடைய கோயிலாகும். சிதம்பரம் நடராசர் கோயிலுக்குள், பல்வேறு கோயில்கள் அமைந்துள்ளன. மூன்றாம் வீதியில் சிவகங்கை திருக்குளத்திற்கு மேற்கே, ஆதிசங்கரர் எழுந்தருளச் செய்த சக்கர எந்திரம் கொண்ட அம்பிகை சிவகாமசுந்தரியின் திருமுன், ஒரு தனிக்கோயிலாக பிரகாரத்துடன் அமைந்து விளங்குகிறது. சிவகாம சுந்தரி கோயிலின் வடக்கே, பாண்டிய நாயகர் கோயில் அமைந்துள்ளது. இது முருகன் கோயிலாகும். இக்கோயிலில் ஆறுமுகப் பெருமான் வள்ளி தெய்வயானை இருபக்கமும் நிற்க மயிலின் மீது எழுந்தருளி காட்சி தருகிறார். அருணகிரிநாதர், இத்தலத்தில் உள்ள முருகப்பெருமானை தனது திருப்புகழில் பாடியுள்ளார்.

### திருமஞ்சன வழிபாடு

தமிழ்நாட்டில் எந்த ஒரு சிவாலயத்திலும் பார்க்க முடியாதபடி சிதம்பரம் கோயிலில் மட்டுமே அரிய வகை வித்தியாசமான சிவத் திருமுன்களைப் பார்க்க முடியும். சிதம்பரம் நடராசரை எல்லா கடவுள்களும் வந்து வழிபட்டு பேறு பெற்றனர். இதை உணர்த்தும் வகையில், நடராசர் கோயில் முழுவதும் ஏராளமான திருமுன்கள் உள்ளன. நடராசர் கோயிலுக்குள் தினமும் 27 இலிங்கங்களுக்கு **திருமஞ்சன** வழிபாடு நடத்தப்படுகின்றன. இது தவிர ஏராளமான இலிங்கங்கள் உள்ளன. சிதம்பரம் நடராசர் கோயிலில் உள்ள சிவகங்கை தீர்த்தக்கரையில் திருத்தொண்டத் தொகையீச்சரம் என்ற பெயரில் ஒன்பது இலிங்கங்கள் உள்ளன. இந்த இலிங்கங்களை ஒன்பது தொகையடியார்களாக எண்ணி வழிபடுகின்றனர்.

சைவ, வைணவ சமய ஒற்றுமையை பறைசாற்றும் வகையில், 108 வைணவ திவ்வியதேசங்களில் ஒன்றான **"திருசித்திரக்கூடம்"** என்று அழைக்கப்படும் கோவிந்தராசப் பெருமாள் கோயில், தில்லை சிதம்பரம் கோயிலின் உள்ளே அமைந்திருக்கிறது. நடராசப் பெருமானின் திருமுன்னுக்கு நேர் எதிரே நின்றுகொண்டு நடராசரை வணங்கியபின் இடதுபுறம் திரும்பி நின்றால் கோவிந்தராசப் பெருமாள் திருமுன் காணலாம். இரண்டு திருமுன்களும் அருகருகே அமைந்திருப்பது தில்லை கோயிலின் சிறப்பாகும். ஒட்டு மொத்தத்தில் சிதம்பரம் நடராசர் கோயில் என்பது சிவத்தலம் மட்டும் அல்ல. பழங்கால விண்வெளி ஆராய்ச்சி கூடமாக உலகத்தின் தோற்றத்தை சொல்லி, உலகத்திற்கும் தனிப்பட்ட மனிதருக்கும் உள்ள ஒற்றுமையை விளக்கி, அறிவியலுடைய எல்லை ஆன்மிகம் என்றும், இன்னும் பலகோடி ஆண்டுகளுக்கு பலருடைய புருவத்தை உயர்த்தப் போகிறது என்றும் கூறலாம்.

**சிவத்திரு.குமரேசன் இராஜசிம்மன்**
உதவிப் பேராசிரியர்
SRM கலை மற்றும் அறிவியல் கல்லூரி
91900329621 - easanaithedi.in.

# சிவபூமியில் சிவனைத் தேடி -

## அக்கரைப்பற்று பனங்காடு அருள்மிகு பாசுபதேசுவரர் திருக்கோயில்



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு



பாசுபதேசுவரர்



மாதுமை அம்மை

ஈழத்திருநாட்டில் தெற்கு பக்கமாக உள்ள அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று நகரிலிருந்து சுமார் 2 மைல்களுக்கு அப்பால் சாகாமம் வீதியில் பனங்காடு எனும் பழம் பெரும் பதியூர் அமைந்துள்ளது. இவ்வூரில் அற்புத சக்திகளோடு அடியவர்களுக்கு அருளாட்சி புரிந்து வரும் திருத்தலமாக பனங்காடு அருள்மிகு பாசுபதேசுவரர் கோயில் விளங்குகின்றது.

### திருத்தலவூரின் வரலாறு

கிழக்கு மாகணத்தின் பண்டையத் தொன்மங்களையும் வரலாறுகளையும் தாங்கி நிற்கும் கிராமங்களுள் பனங்காடும் ஒன்று. இயற்கையாகவே ஆறு, குளம், கடல் ஆகிய நீர்நிலைகள் இயைந்த உயிர்ச்சக்தி நிறைந்த செந்நெல் விளையும் பூமியும் இவ்வூரின் அழகிற்கு மகுடம் சூட்டுகிறது. கி.பி 2ம் நூற்றாண்டு காலாப்பகுதியில் **'தாடகிரி'** எனும் குறுநில இராசதானி அரசாட்சியில் முக்கிய கேந்திர நிலையமாக பனங்காடு நிலவியிருக்கின்றது. இவ்வூரின் தொன்மைக்கு, சங்காலத்தில் நிலவிய **'நடுகல் வணக்கம்'**, இங்கும் நிலவியதற்கான எச்சங்கள் காணப்பட்டதாகவும், போர்த்துகீசரின் ஆதிக்கத்தின் போது நடுகல் வணக்கம் அழிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றமை சான்றாகும்.

பின்பு 15ம் நூற்றாண்டுப் பகுதியில் வியாபார நோக்கம் கருதி தென்னிந்தியாவிலிருந்து வருகை தந்த செட்டியார் குலத்தவர்கள் இவ்வூர்ப் பெண்களைத் திருமணம் முடித்து, வாழ்விடத்திற்காக, அவர்கள், சுற்றியிருந்த காடுகளைத் துப்பரவு செய்யும் போது, ஆங்காங்கு கிடைத்த நடுகல் எச்சங்களை ஒன்றாகத் திரட்டி **'மாவிலங்கை'** மரத்தடியில் அவற்றை வைத்து, அவ்விடத்தில் வணிக தெய்வமான ஐயனாருக்கு சிலையும் சிறிய கோயிலையும் நிறுவி, அவரை ஊர்க்காவல் தெய்வமாகப் போற்றிப்பரவினர். இவற்றின் வரலாறு 17ம் நூற்றாண்டில் வரையப்பட்ட **'ஐயனார் அகவல்'** எனும் காவியத்தில் பதியப்பட்டுள்ளது. இக்காவியத்தில் இவ்வூரின் பண்டைய பெயராக 'பனங்காமணச்சோலை' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தென்னிந்தியாவிலிருந்து வருகை தந்த சிந்தானைக்குட்டிச் சித்தரின் அருள்வாக்கால் அவ்விடத்தில் சிவன் கோயில் எழுப்பப்பட்டது. இதனால் ஐயனார் கோயில், அருள்மிகு பாசுபதேசுவரர் சிவன் கோயிலாக மடை மாற்றம் செய்யப்பட்டது.

### திருத்தல வரலாறு

தொன்மைக் காலத்தில் ஐயனார் கோயிலாக விளங்கிய இவ்விடத்தின் மகிமையை உணர்ந்து, தென்னிந்தியாவிலிருந்து வருகை தந்த சித்தானைக் குட்டி சித்தரும், பனங்காட்டிற்குச் சென்று அங்கு பல மாதங்கள் தங்கியிருந்த போது, ஒரு நாள் ஐயனார் கோயிலின் அருகில் உள்ள இடத்தினை தனது கால் பெருவிரலினால் கோடிட்டுக் காட்டி அவ்விடத்தில் ஓர் சிவாலயம் அமைக்குமாறு அருள்வாக்கு உரைத்தார்.

சித்தர் சுவாமியின் அருளுரையின் படி ஊர் மக்கள் ஒன்றுகூடி, ஆச்சாரி ஒருவரை வரவழைத்து, சிவாலயத்திற்கென நிலையம் எடுக்க பணிப்புரை விடுத்த போது, ஆச்சாரி குறித்த இடமும், சித்தர் குறித்த இடமும் ஒன்றாக இருக்கக் கண்டு ஊரவர் அதிசயித்து, அன்றிலிருந்து ஊரில் உள்ள தனவந்தர்களின் பொருள் உதவியுடன் உதயமான இச்சிவாலயம், தற்போது சிற்பாக விதியின் படி இரு தளங்களைக் கொண்ட விமானம், மண்டபங்கள், உள்வீதி, பரிபாரத் தெய்வங்களுக்கான கோட்டங்கள், கொடிமரம், யாகசாலை, மடைப்பள்ளி போன்ற அம்சங்கள் மெருகேற்றப்பட்டு விசாலமாகி விரிவுபட்டு இருக்கின்றது

முதன் முதலில் 1963 ஆம் ஆண்டு முதற் குடமுழுக்கு கண்ட இச்சிவாலயம் 1988, 2004, 2000 என ஆகிய ஆண்டுகளிலும் புதுப்பொலிவுடன் குடமுழுக்கு விழா கண்டுள்ளது. சித்தர் சுவாமியின் சித்தத்தினால் உருவாகிய சிவாலயத்தில், நாள்தோறும் நித்திய வழிபாடுகள், வருடாந்த பெருந்திருவிழா என்பன ஊர் குடிவழக்கின் படி நடைபெறுவது சிறப்புப் பெற்றது. திருவிழா காலங்களில் மாம்பழத் திருவிழா, வேட்டைத் திருவிழா, தெப்பத் திருவிழா, தீர்த்தத் திருவிழா என்பனவும் சிறப்பாக நிகழ்ந்து வருகின்றன. மற்றும் சிவனிரவு, கழுவாய் வழிபாடு (பிரதோசம்), கேதார கௌரி போன்ற விரத வழிபாடுகளும் பண்டிகை விழாக்களும் சிறப்புப் பூசைகளும் வருடந்தோறும் இடம் பெற்று வருகின்றன.

### மூர்த்தியின் பெருமை

ஓர் சிவாலயம் கொண்டிருக்க வேண்டிய மூர்த்தி, தல, தீர்த்தச் சிறப்புக்களை பனங்காட்டில் அருளாட்சி புரியும் அருள்மிகு பாசுபதேசுவரர் கோயிலும் கொண்டிருக்கின்றது. இங்குள்ள மூர்த்தியாக பாசுபதேசுவரரோடு மாதுமை அம்பாளும் உடனுறைந்து அடியவர்களுக்கு அருள்பாலித்து வருகின்றார். இங்குள்ள மூர்த்தியின் பெயரைத் தாங்கிய வேறு எந்த ஒரு சிவன் கோயிலையும், ஈழத்தில் காண முடியாது. அதுவும் ஈழத்தின் தெற்குப் பகுதியில் பாசுபதமூர்த்தியாக எழுந்தருளி அருளாட்சி பரிவது இங்குள்ள மூர்த்தியின் தனிச் சிறப்பாகும்.

மகாபாரதத்தில் சிறந்த வில்லாளியான பார்த்தனன், கௌரவர்களை வெற்றி கொள்ள சிவனை நோக்கி காட்டில் பல வருடங்கள் கடுந்தவம் புரிந்ததன் பேறாய், சிவனும் பார்த்தனனை ஆட்கொள்ள வேடர் கோலம் (கிராதர்) பூண்டு, அவனுக்குக் காட்சி கொடுத்து, கௌரவர்களை வெல்வதற்கு 'பாசுபதம்' எனும் அம்பினை கொடுத்தருளினார்.

இதனால் சிவன் 'பாசபதமூர்த்தி' என்ற பெயரால் போற்றப் படலானார். இவ்வரலாற்றை **"அருச்சுனருக்கு அருள் செயக் கருதும் வேடத்தார்"** என்று சம்பந்தப் பெருமானும், **"ஞான வேடன் விசயற் கருள் செயும் கான வேடன்"** என்று அப்பர் பெருமானும் தேவாரப்பாடல்களில் போற்றிப் பரவியுள்ளனர். இத்தகைய பாசுபத மூர்த்தியை தென்னிந்தியாவில் திருவேட்டகுடி, திருவலம்புரம் ஆகிய தலங்களில் சிறப்பு மூர்த்தியாகக் கண்டு இன்புறலாம். இதனைத் தொடர்ந்து இலங்கையில் பனங்காட்டில் உறைந்துள்ள அருள்மிகு பாசுபதேசுவரர் சிவாலயத்தில் இம்மூர்த்தியின் அருளாசிகளைக் கண்டு உய்வு பெறலாம்.

இக்கோயிலின் வரலாற்றுச் சிறப்புக்களை அறிய உதவும் மூலாதாரங்களுள் பனங்காட்டு ஐயனார் அகவல் என்னும் பாடல் முதன்மை பெறுகின்றது. மற்றும் 2020 இல் வெளியிடப்பட்ட குடமுழுக்கு மலரும் இக்கோயிலைப் பற்றி அறிய உதவும் சான்றாகும். இன்னும் பல அப்பிரதேச ஆய்வாளர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளும், பிரதேச கவிஞர்களால் பாடப்பட்டுள்ள பத்தி சிற்றிலக்கியங்களும் இத்தல வரலாற்று ஆவணங்களாகக் கொள்ளப்படுகின்றன. மற்றும் கலாபூஷணம் சிவத்திரு (சிவஸ்ரீ) லோகநாதக்




குருக்கள் ஆக்கியருளிய பனங்காடு அருள்மிகு பாசுபதேசுவரர் கோயில் வரலாற்றுக் காவியம், திருஊஞ்சற்பாடல் என்பனவும் இத்திருத்தல வரலாற்றையும், சிறப்பையும் அறிய உதவுவனவாகும்.

**"ஐயனும் அம்மை யோடருள் புரிந்து பின்
வெய்ய பொற்றூணியும் வில்லுமந்தரமும்
துய்ய பாசுபத மெய்த் தொடையுமுட்டியு
மொய்யென நிலையுடன் உதவினானரே"**

**(வில்லிபாரதம் - ஆரணியபருவம்.
அருச்சுனன் தவநிலைச் சுருக்கம்)**

**திருச்சிற்றம்பலம்**

## திருவையாறு ஐயாறப்பர் திருக்கோயிலில் ஆடி மறைமதி நாளில் அப்பர் கயிலைக் காட்சி





**திருவையாறு அருள்மிகு அறம்வளர்த்தநாயகி உடனாகிய ஐயாறப்பர் திருக்கோயிலில், அப்பர் பெருமானுக்கு இறைவன் ஆடி மறைமதி (அமாவாசை) அன்று கயிலைக் காட்சியை கொடுத்தருளினார்.**

# தவத்தினாற் பெறும் பயன்

தவம் என்பது ஓர் உணர்ச்சி, உணர்ச்சிப் பேரலை. அன்பின் அடுத்த நிலை பாசம் பாசத்தின் அடுத்த நிலை காதல் காதலின் அடுத்த நிலை பத்தி அந்தப்பத்தியின் அடுத்த நிலையே தவம். எங்கும் நிறைந்த இறைவனை உள்ளத்தில் இருத்தி உணர்ச்சி அலைகளால் வணங்கி காதலால் புகழும் பேர் உணர்ச்சிய தவம். பத்தி என்பது உணரப்படுவது. முத்தி என்பது ஆற்றப் படுவது. உணரப்படும் பத்திக்கும் ஆற்றப்படும் முத்திக்கும் இடையிலே இருக்கின்ற உணர்ச்சிப் பெரும் கூறே தவம் எனலாம்.



பத்தி எனும் நுண்ணிய உணர்வை முத்தி எனும் அளவிட முடியாத செயற்பாட்டுக்கு வழிகாட்டும் ஒரு சிறந்த வழிகாட்டியே தவம் என்றும் இன்னொரு முறையில் சொல்லலாம். தவம் என்றவுடன் உறவு, உணர்ச்சி, உடமை, கடமை, எல்லாவற்றையும் துறந்து விட்டு கோவணத்துடனும் கமண்டலத்துடனும் காட்டிற்கு செல்வதை தான் பலர் நினைக்கின்றார்கள். உண்மையில் அது தவமே இல்லை. அது ஓர் துறவு நிலை தான். அப்படி என்றால் உண்மைத்தவம் எது? அந்த தவத்தின் இயல்பு என்ன என்று தேடினால் அதற்கு ஒரு பதில் தான் அமைகின்றது பத்தி நிலையின் உச்ச வளர்ச்சிக் கட்டம் தவம்.

“ஆன்கன்று தேடி அழைக்கும் அதுபோல்
நான்கன்றாய் நாடி அழைத்தன் என்நாதனை
வான்கன்றுக்கு அப்பாலாய் நின்ற மறைப்பொருள்
ஊன்கன்றால் நாடிவந்து உள் புகுந்தானே”

இது சைவத்தமிழ் ஆகமப்பெருஞ்சித்தர் என்று புகழப்படும் திருமூலனின் வார்த்தைகள். பத்தியின் தவ முதிர்ச்சியை இந்த வாக்கியங்கள் சுட்டி நிற்கின்றன. பத்தியை தாய்மையோடு ஒப்பிட்டு நோக்க நினைத்த திருமூலர் தாய்மைக்கு சிறந்த உதாரணம் எதுவாக இருக்கும் என்று நினைத்தார். நினைத்த மாத்திரத்தில் அவரின் நினைவில் ஓர் உவமை தோன்றியது. அந்த உவமையை உருவேற்றிப் பின்வருமாறு வருணிக்கின்றார். ஒரு தாய்ப்பசுவும் சேய்ப்பசுவும் இருக்கின்றது. இப்போது அந்த சேய்ப்பசுவை தாயிடம் இருந்து பிரிக்கின்றோம். அந்த சேய்ப்பசு தாயைப்பிரிந்து கதறி கதறி தாய்ப்பசுவை அழைக்கும்.

சரி இந்த உதாரணத்தை சொல்லி விட்டு திருமூலப்பெருஞ்சித்தன் அடுத்த வரிகளில் தேனாக ஒன்றை சொல்லிப்போகின்றார். அந்தப்பசுவிடம் இருந்து அக்கன்றை பிரித்த போது அந்தக்கன்றுக்கு எவ்வளவு வலித்திருக்கும் எவ்வளவு கதறி இருக்கும். அதைப்போல என்னை சிவத்திடம் இருந்து இந்த வினை பிரித்துவிட்டது. ஆகவே என் தாயாகிய, நாதனாகிய ஈசனைத்தேடி அந்தக்கன்றைப்போல கதறிக்கதறி அழுகின்றேன் என்று இயம்புகின்றார்.

சரி கன்றின் பார்வையில் இருந்து இவற்றை திருமூலர் சொல்லி விட்டு இனி தாயின் பார்வைக்கு வருகின்றார். வான்கன்று, வானவர், உம்பர், அமரர் என்று எல்லாம் அழைக்கப்படும் தேவர்களுக்கு எல்லாம் அப்பாற்பட்ட, தேவர்களுக்கு எல்லாம் மேலான, தேவர்களாலும் உணர முடியாத அந்த நுண்ணிய மறைபொருள் ஆகிய ஈசன் தசைகளாலும் என்புகளாலும் நரம்புகளாலும் ஆக்கப்பட்ட இந்த ஊன் உடலில் அடைந்து இருந்த என்னையும் விரும்பி எனக்கும் அருளும் பொருட்டு என்னை நாடி வந்து என் உள்ளத்தில் எழுந்தானே என்று கூறுகின்றார். இறைவன் கண்ணெதிரே தோன்றினான் என்று கூட திருமூலர் சொல்லவில்லை. என் உள்ளத்து உணர்ச்சிகளில் நிறைந்தான் என்றே சொல்கின்றார். இதன் பெயர் தான் பத்தி.

“முத்தியில் அத்தன் முழுத்த அருள் பெற்றுத்
தத்துவ அத்தி தலைப்பட்டுத் தன்பணி
மெய்த்தவம் செய்கை வினை விட்ட மெய் உண்மையைப்
பத்தியில் உற்றோர் பரானாந்த போதரே”

இதே தமிழ்ச் சித்தன் தன் இன்னோர் பாடலில் சிலவற்றை தெளித்துப் போகின்றான். மேலே குறிப்பிட்ட பத்தி எனும் உணர்ச்சியில் மூழ்கி மூழ்கித் திளைத்தவர்கள், முத்தி நிலைக்கு மெல்ல மெல்ல செல்வார்களாம். இவ்வாறு செல்லும் பாதையில் தம் செருக்கு, தீயகுணம், மலங்கள் போன்ற தேவை அற்ற அறிவுகளை நினைவில் இருந்து அகற்றி சிவம் எனும் ஒருவித போதை அல்லது இன்பமய உணர்வில் மூழ்கி இருப்பார்களாம். இதன் பெயர் தான் மெய்த்தவம் என்று உறுதிபட அறுதியிட்டுப் போகின்றார் பெருமூலர்.

இவ்வாறான உண்மைப்பத்தி நிலையில் இருப்பவர்கள் தான் முத்தியும் பத்தியும் சித்தியும் கூடியவர்கள் என்று அறுதியிடுகின்றார். இதுவே பத்தி தவமாகும் பெருநிலை என்று கூறலாம். இவ்வளவும் சென்ன பெருஞ்சித்தன் தவத்திற்கு நேரும் இடைஞ்சலைப்பற்றி சொல்லாமல் போவானா. அதையும் கீழ்க்கண்ட பாடலில் விளக்குகின்றான்.

“வளங்கனி தேடிய வன்தாள் பறவை
உளங்கனி தேடி வழி தரும் போது
களங்கனி அங்கியில் கைவிளக்கு ஏற்றி
நலம் கொண்ட நால்வரும் நாடு கின்றாரே”

தவத்தின் மூலம் முத்தியை நாடி உயிர் செல்கின்றது. இதற்கு எதை உவமானமாக கூறலாம் என்று நினைத்த மூலன் யோசனையின் பின் கூறினான். ஒரு நன்றாகப் பழுத்த பழத்தை நாடிப் பறவை செல்வதைப் போல உயிராகிய பறவையானது பழமாகிய முத்தியை நோக்கி செல்கின்றது என்று உவமிக்கின்றான் பெருமூலன். இவ்வாறு முத்தியை தேடி தவத்தின் மூலம் உயிர் முயற்சிக்கும் போது, அவற்றுக்கு இடைஞ்சல் தரும் விதமாக மனம், வாக்கு போன்ற நாற்காரணங்கள் வருகின்றன என்று கூற விரும்பிய திருமூலன், அதற்கும் ஓர் உவமை வைத்தான். விளக்கிலே எரியும் ஒளியைப்பார்த்து அதிலேப் போதையுற்று மயங்கி அதை அடைந்து பொசுங்கி இறக்கும் வீட்டில் பூச்சிகளைப் போல என் மனம் இவற்றால் அலை பாய்கின்றது என்று கூறுகின்றார்.

தவத்தை விளக்க வந்த மூலர் முத்தியை பழத்துக்கும், உயிரை பறவைக்கும் ஒப்பிட்ட ஒப்பீடே பெரும் செம்மை வாய்ந்தது எனத் தெளிந்துபோகலாம். ஒரு மரத்தை எடுத்துக்கொள்வோம். அந்த மரம் எடுத்தவுடன் ஒரு நொடியில் காய்த்துக்கனியாது. உரிய காலம் வரத்தான் அம்மரம் பூக்கும். பூத்ததும் கொட்டிப்போகும் பூக்கள் நிறைய, அவ்வாறு கொட்டாமல் மரத்திலே நிற்கும் பூவானது மகரந்தச் செயற்கைக்கு உட்பட்டு சூல் கொண்டு பிஞ்சாதல் வேண்டும். இவ்வாறு வந்த பிஞ்சு முற்றி காயாக வேண்டும். காய், காலம் வந்த பின்பு கனிய வேண்டும். இது தான் பழத்தின் செயன்முறை. மலராகிய உயிர் அன்பினால் பிஞ்சாகி பத்தியால் காயாகி தவத்தினாலே கனியாகும்.

கனியாக முதல் அந்தக்காயை மரமும் விடாது மரத்தை காயும் விடாது. இழுத்துப்பற்றி பிடுங்கினால் தான் இரண்டும் தனியாகும் அதுவும் முழுமையாக நடைபெறாது இரண்டு பகுதியிலும் சேதமுற்று நீரை வெளியேற்றித்தான் பிரியும். ஆனால் பழம் அவ்வாறில்லை. அது கனிந்த நிலை. எந்தவொரு சேதாரமும் இல்லாமல் மரத்திலிருந்து அதுவாகவே கழன்று விடும். மரமும் அதைப்பற்றிப்பிடித்து வைத்திருக்காது. மற்றைய நிலைகளில் உயிர் போவது காய், பிஞ்சு போன்றவற்றை பிடுங்குவது போல சற்றுக்கடினமானது. ஆனால் தவத்தின் மூலம் அடைந்த முத்தி நிலையில் பழம் போல அதுவாகவே இலகுவாகப் பிரிந்து விடும்.



யாழவன்
சிவவேதன்

வாழ்க்கைக்கும் உறவுக்கும் பிறப்புக்குமான தொடர்பை அறுப்பதே முத்தி அதன் வழிகாட்டியே தவம்.

சரி இப்போது பறவைக்கு வருவோம். கூண்டிலே அடைபட்ட பறவை போன்றது தான் இந்த உயிர். உடல் எனும் கூண்டிலே அடைக்கப்பட்ட பறவை. இதிலிருந்து வெளியே வரும் விடுதலை தான் முத்தி. அந்த விடுதலைக்கான திறப்பே தவம். கூண்டிலே இருக்கும் பறவைக்கு உணவு, நீர் போன்ற சிறு இன்பங்கள் கிடைக்கும். ஆனால் சுதந்திரம் எனும் பேரின்பத்தை முடக்கும் துன்பமும் அதில் உண்டு. ஆனால் சுதந்திரப் பறவைக்கு நீர், உணவு போன்றன இலகுவில் கிடைக்க மாட்டாது. இருப்பினும் சுதந்திரம் எனும் உன்னத நிலை அவற்றிடம் உண்டு. அஃதை ஒத்தது தான் உயிர்.

உடலோடு ஒட்டி வாழும் எம் உயிருக்கு எத்தனையோ இன்பங்கள் உண்டு. காமம், மகிழ்ச்சி, போதை என அப்பட்டியல் நீளுகின்றது. ஆனால் அதே அளவுக்கு துன்பங்களும் உண்டு. கூட்டிலே அடைப்பட்டு துன்பமுறும் பறவை கூட்டை விட்டு பறப்பது போல உண்மையான முத்தியை நாம் பெற்றால் அதே மகிழ்ச்சியுடன் எம்முடலை விட்டு உயிர் பிரியும். சுதந்திரம் பெற்ற பறவையைப் போல உயிரும் பிரியும். இதுவல்லோ தவத்தின் சிறப்பு, சிவானந்தத்தின் பேர் அருள், சிந்தையில் ஊறும் தேன். விட்டில்ப் பூச்சியைப்போல எம்மை அழிவை நோக்கி இட்டுச்செல்லும் மனத்தை கட்டுப்படுத்தி பேர் ஆனந்தத்தைப்பெறும் பெரும் மனநிலை தான் தவம் என்றும் சொல்லலாம்.

“தேனுக்குள் இன்பம் சிவப்போ கறுப்போ
வானுக்குள் ஈசனைத் தேடும் மதியிலீர்
தேனுக்குள் இன்பம் செறிந்திருந்தாற் போல்
ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந்தானே”

இது திருமூலனின் பெருந்தவக்கோட்பாடு. இறைவன் என்ற ஒப்பற்ற கடவுளும் அவன் வழிபாடும் பத்தியும் தவமும் உணர்ச்சியின் சாற்றுப்பிழிவுகள் என்று சாற்றிப்போகின்றான். ஒரு கேள்வியை தொடுக்கின்றான். தேனுடைய சுவை சிவப்பா கறுப்பா?. என்ன கேள்வி இது, என்று உடனே மூளை ஒரு கணம் சிந்தித்திருக்கும். அதற்கு அடுத்த வரியில் பதில் அறைகின்றான். வானத்துக்குள் கடவுள் உண்டு என்று தேடுபவர்களே. தேனில் எப்படி இன்பம் நிறம் அற்று உள்ளதோ அது போல் உனக்குள் உருவு அற்று உணர்ச்சியாய் இறைந்தவனே ஈசன் என்று இயம்பிப்போகின்றார். இந்த உணர்வுப்பெரும்பொருளின் உணர்ச்சி வழிகாட்டியே தவம்.

“தவமே புரிந்திலன் தண்மலர் இட்டு
முட்டாது இறைஞ்சேன்
அவமே பிறந்த அருவினையேன்
உனக்கு அன்பர் உள்ஆம்
சிவமே பெறும் திருஎய் திற்றிலேன்
நின் திருவடிக்கு ஆம்
பவமே அருளு கண்டாய் அடியேற்கு
எம் பம்பபரனே”

இது வாதவூரனின் திருவாசகத்தில் ஒரு பாடல். சிவனே உன்னை வணங்கவில்லை. உன்னை நினைத்து தவம் செய்யவில்லை. மலரிட்டு வழிபடவில்லை. உன் அடியார்களோடு நட்பாகவில்லை ஆதலால் இந்தப்பிறவியே எனக்கு வேண்டாம். உன்னை நினைத்து தவம் புரிய வேறு ஓர் பிறவி தா என்ற விதத்தில் இந்தப்பாடல் அமைகின்றது. அஃதே தவம். அது தான் தவம். உள்ளத்து உணர்ச்சியில் கொள்ளவும் படாத இறைவனை உள்ளத்து உணர்ச்சியில் வைத்துப்ப்போவதே தவம். ஆதலால் தவம் எனும் உணர்வு சார்ந்து அருள் எனும் இறைவனாகிய பேர் உணர்வை அடைவோம்.

“நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்”

திருச்சிற்றம்பலம்

# தென்னாட்டு நிகழ்வுகள்







ஆடிக் கனை நாண்மீன் (ஆடிப்பூரம்) நிகழ்வுகள்





ஆடி நிறைமதி தென்னாடு வெளியீடு





ஆடி மறைமதி (அமாவாசை) தென்புலத்தார் வழிபாடுகள்



சுந்தரர் குருபூசை



தென்னாட்டில் நோன்மை தீக்கை வழங்கல் - சிவத்திரு.நிகரிலரசு மற்றும் சிவத்திரு.சிவநாதன்

தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் பதினோராவது திங்கள் செய்தியிதழ் "தென்னாடு" , சிவத்திரு.சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு வண்பண்ணை தயா அச்சகத்தில் அச்சிடப்பட்டு மடங்கல் நல்லோரை ஆவணித் திங்கள் 6ம் நாள் நிறைமதி அன்று (22-08-2021 ஞாயிற்றுக்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி , தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். தொடர்பு: குளங்கரை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.

தொலைபேசி +94 21 221 2739 | புலனம் +94 75 653 3111 | மின்னஞ்சல் thennavan@thennadu.org | fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org